யாழ்ப்பாணம்

Registered as Newspaper | பக்கங்கள் 06 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 | பங்குனி 23 | (5.4.94) | செவ்வாய்க்கிழமை | ஓசை 6

## க. பொ. த. (சா-த) பரீட்சை யாழ். பெறுபேறுகள் வருகின்றன

க. பொ. த. சாதாரண தர பெறுபேறுகள் இன்று அல்லது நாளை யாழ்ப்பாணம் வந்து சேரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இப்பரீட்சையின், யாழ்மாவட்ட பரீட்சார்த்திகள் பெற்ற பெறுபேறுகளே எடுத்து வரப்படும். இன்று அல்லது நாளை திருகோணமலையிலிருந்து புறப்பட்டு பருத்தித்துறைக்கு வந்து சேரும் கெந்தல கப்பலில் இது எடுத்து வரப்படும் என அறிவிக்கப்பட்டது. மாவட்ட காணி ஆணையாளர் திரு. கைலநாதன் இவற்றை எடுத்து வருவார் என தெரிவிக்கப்பட்டது. இதே கப்பலில் இவரால் புகையிரத மற்றும் ஓய்வு பெற்ற உத்தியோகத்தருக்குரிய ஓய்வூதியவவுச்சர்களும் எடுத்துவரப்படுமென தெரிவிக்கப்பட்டது.

### யாழ். குடாநாடு மீது படையெடுப்பு

# ஐ. தே. கவிற்குள் ஏற்பட்ட குழப்பமே தாக்குதல் தாமதத்திற்கு காரணம்

### பாதுகாப்பு வட்டாரங்கள தெரிவிப்பு

யாழ். குடாநாட்டின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை ஆரம்பிப்பதற்கு இராணுவம் தயார் நிலையில் உள்ள போதும், தென்மாகாணத்தில் ஆளும் ஐக்கிய தேசிய கட்சிக்கு கிடைத்த தோல்வியானது தாக்குதலைத் தாமதப்படுத்தியுள்ளதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது. ஜனாதிபதியின் தலைமைத்துவம் தொடர்பாக ஐ. தே. க. விற்குள் எழுந்துள்ள நம்பிக்கையீனமும், அவர் கடைப்பிடிக்கும் கொள்கை தொடர்பாக எழுந்துள்ள அபிப்பிராய பேதங்களுமே இத்தாமதத்திற்கு காரணம் என மேலும் தெரிவிக்கப்படுகின்றது.


சீனாவில் இருந்து சென்ற பெப்ரவரி மாதம் கொள்வனவுசெய்யப்பட்ட ஐந்நூறு கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களில் எண்பது சதவீதமானவை பலாலி மற்றும் யாழ் குடாநாட்டில் உள்ள கடற்படை, இராணுவமுகாம்களுக்கு விமான மார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் அனுப்பப்பட்டுள்ளதாக சிரேஷ்ட அதிகாரியொருவர் சிங்கள வார இதழ் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ் குடாநாட்டில் நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினருடன் மேலதிகமாக பத்தாயிரம் இராணுவத்தினர் தற்போது அனுப்பப்பட்டுள்ளதாகவும் தற்போது மொத்தம் நாற்பதாயிரம் படையினர் அங்கு நிறுத்தப்பட்டிருப்பதாகவும் இவர்களைக் கொண்டே எதிர்காலத்தில் நடைபெறவுள்ள இராணுவ நடவடிக்கைகளுக்கு திட்டங்கள் தீட்டப்பட இருப்பதாகவும் அந்த இராணுவ அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ் குடாநாட்டின் மீது ஓர் இராணுவ நடவடிக்கையை மேற்கொள்ள திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் பாதுகாப்பு காரணங்களை முன்னிட்டு அதனை வெளியிட முடியாது எனவும் ஆகவே தற்போது உத்தரவுக்காக எந்நேரமும் இராணுவம் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இத்தாக்குதல் திட்டங்கள் தென்மாகாண சபை தேர்தலுக்கு முன்னர் தீட்டப்பட்டன எனவும், தென்மாகாணசபை தேர்தல் தோல்வியும் அதனையடுத்து பகிரங்கமான எதிரணியொன்று ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உருவாகியுள்ளதால் இதனை உடன் நடைமுறைப்படுத்த தயக்கம் காட்டப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கட்சிக்குள் உள்ள டி.பி. விஜேதுங்

(6 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வாகனவிபத்தில் பலியாகிய பள்ளிச் சிறுவனைப் படத்தில் காணலாம்.

## பரபரப்பான நிலையில் நடந்த ஐ. தே. க. செயற்குழுக் கூட்டம்

## புலிகள் தாக்கு 2 பொலிசார் பலி

(கொழும்பு)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள புல்மோட்டைப் பகுதியில் பொலிசார் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு பொலிசார் கொல்லப்பட்டுள்ளனர் என்று பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் சேமுனு குலதுங்கா கூறியுள்ளார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கமிட்டி நியமனம்

(கொழும்பு)

தென்மாகாண சபை தேர்தல் தோல்வியை ஆராயும் பொருட்டு ஜனாதிபதி ஒரு கமிட்டியை அமைப்பதாக தெரிவித்துள்ளார்.

இக் கமிட்டிக்கு பிரதமர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ. தே. க. செயற்குழுக் கூட்டம்

## பிரேமா - டி. பி. ஆதரவாளர்கள் கடும் வாக்குவாதம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டமும் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவர்கள் கூட்டமும் மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் கட்சி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது எனவும், இக் கூட்டத்தில் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் ஆதரவாளர்களுக்கும் ஆர். பிரேமதாசாவின் ஆதரவாளர்களுக்கும் இடையே பலத்த சர்ச்சைகள் இடம்பெற்றதாகவும் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன:

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தென்மாகாணத்தில் ஏற்பட்ட தோல்வியானது ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினால் ஏற்பட்டது என பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். இவ்வேளை கூட்ட மண்டபத்தில் பெரும் அமளிதுமளி ஏற்பட்டதென பி. பி. ஸி. சிங்கள சேவைக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது:

இத் தோல்வியானது கட்சியின் எதிர்காலத்திற்கு பெரும் சவாலாக அமையும் என கட்சி உறுப்பினர்கள் பலர் தெரிவித்தனர். எனவே தோல்விக்கான காரணத்தை உடனடியாகக் கண்டுபிடித்து பரிகாரம் காணுமாறும் அவர்கள் கூறினர்

இதனையடுத்து கூட்டத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மறைமுக நெருக்குதல் வேண்டாம் நேரடியாக என்னிடம் கேளுங்கள்

## பதவிவிலகுகிறேன் என்கிறார் சிறிசேனகுறே

(கொழும்பு)

ஜனாதிபதியோ அன்றி ஐக்கிய தேசிய கட்சி சிரேஷ்ட உறுப்பினர்களோ என்னிடம் நேரடியாக கட்சி பொதுச் செயலாளர்பதவியில் இருந்து விலகுமாறு கேட்டால் நானே அப்பதவியை இராஜினாமா செய்யத் தயாராக உள்ளேன் என கட்சி செயலாளரும் அமைச்சருமான சிறிசேனகுறே தெரிவித்துள்ளார்;

ஐக்கிய தேசிய கட்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு முன்னர் இவர் கண்டியில் கட்சிப் பிரதிநிதிகளைச் சந்தித்த போது மேற்படி கருத்தை தெரிவித்துள்ளார்;

இதை விட்டுவிட்டு மறைமுகமாக என்னை பதவி விலகுமாறு இவர் தெரிவிப்பதனாலோ அன்றி என்னைக் கட்சி பதவியில் இருந்து பலவந்தமாக வெளியேற்றுவதென்பதோ ஒரு கடினமான விடயமாக அமையும் என்பதை நான் மத்திய மாகாண கட்சி உறுப்பினர்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்;

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.கவிற்குள் பிளவு ஏற்படுத்த சில சக்திகள் முயல்கின்றன

## டி. பி. விஜேதுங்கா குற்றச்சாட்டு

(கொழும்பு)

தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின் பின், ஐ. தே. கவைப் பலவீனப்படுத்தவும், ஐ. தே. கவிற்கு அபகீர்த்தி ஏற்படுத்தவும், சில செய்தித் தொடர்பு சாதனங்கள் முயற்சிமேற்கொண்டுள்ளன, எனினும் ஐ. தே. கவில் எத்தகைய பிளவும்இல்லையென்பதைக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவருக்கும் தெளிவாக தெரிவிக்க விரும்புவதாக ஐ. தே. கவின் தலைவரும், சிறிலங்கா ஜனாதிபதியுமான டி. பி. விஜேதுங்கா கூறியுள்ளார்-

கொழும்பில்நேற்றுநடைபெற்றசெயற்குழு கூட்டத்தின்பின் பத்திரிகைகளுக்கு அறிக்கை ஒன்றை வெளியிட்ட அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், கிளைக் காரியாலயங்கள் தான் வெற்றிக்கு முழு அளவில் உழைக்க வேண்டியவை என்றும், எனவே கட்சிக் கிளைக் காரியாலயங்கள் அனைத்தும் தமது கடமையை எவ்விதத்தடங்கலுமின்றி செவ்வனே ஆற்ற வேண்டும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

...குள் உள்ள டி. பி. விஜேதுங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வீரச்சாவு

மட்டக்களப்பு திக்கோடை கிராமத்தை சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து நடத்திய தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி-பூநகரி படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகள் அரசியல் துறை அறிவித்துள்ளது.

# கோமாரியில் தபால்கள்

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடிக்கும் 'வாதுவ' கப்பல் இன்று கொழும்பு நோக்கிப் புறப்படும் 'கோமாரி' கப்பல் அத்தியாவசிய பொருள்களுடன் நாளை புதன் கிழமை காலை பருத்தித்துறைக்கு வருகிறது. இதில் தபால் பொதிகள் வருமென எதிர்பார்க்கப்படுகிறது, (யோ)

பகல் இடம்பெற்ற வாகனவிபத்தில் பலியாகிய பள்ளிச் சிறுவனைப் படத்தில் காணலாம்.

# ஆரியகுளம் பகுதியில் கோரவிபத்து மாணவன் தலைசிதறி மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நகப் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில் பாடசாலைச் சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக மரணமடைந்தான்.

நண்பகல் 12 30 மணியளவில் பலாலிவீதியும் பருத்தித்துறை வீதியும் சந்திக்கும் இடத்தில் சிறுவன்வந்த துவிச்சக்கர வண்டியும் பயணிகள் பஸ் ஒன்றும் மோதிக்கொண்டதினால் இச்சிறுவன் மரணமடைந்தான்.

நாயன்மார்கட்டு அரசடிப் பிள்ளையார் வீதியைச் சேர்ந்த தில்லைநாதன் (வயது6) என்ற சிறுவன் பாடசாலை விட்டு தனது உறவினர் ஒருவரின் துவிச்சக்கர வண்டியில் வந்து கொண்டிருந்ததாகவும் அப்போது பின்புறமாக வந்து பருத்தித்துறைநோக்கிசென்று கொண்டிருந்த மினிபஸ்ஒன்றுடன் விபத்து ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது இவ் விபத்தில் துவிச்சக்கரவண்டியைச் செலுத்தி வந்த இவரது உறவினர் தப்பிக்கொண்டார்;

கொல்லப்பட்ட இம்மாணவனது தலைப்பகுதி சிதறிக் காணப்பட்டது; இவரது உடலபின்னர்யாழ் போதனா வைத்தியசாலைபிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது;

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை தமிழீழக் காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(பா,) (நி)

# மணலாற்றில் கடும் மோதல் மூன்று புலிகள் வீரச்சாவு

முல்லை மாவட்டம் மணலாறுப்பகுதியில் நேற்று முன்தினம் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதலின் போது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்தனர்;

வீரச்சாவடைந்த கப்டன் பூவழகு (வினோத் (வின்சன் அன்ரனி விஜிதகுமார் திருமலை தற்போதைய முகவரி சுரேந்தர் குடியேற்றத் திட்டம் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு) கப்டன் அரசலிங்கம் (சின்னையா பாண்டியன்-பரப்புக் கடந்தான் வட்டக்கண்டல் மன்னார்) 2ம் லெப்டினன்ட் சின்னமணி(வீரபுத்திரன் நடராஜா ஒட்டிசுட்டான் முத்தையன் கட்டு முல்லைத்தீவு இம் மூன்று போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.;

இம் மோதலில் 5 படையினர் காயமடைந்ததாக சிறிலங்கா தரப்பு கூறுகிறது

# குடும்பப்பதிவு அட்டை செயலகம் இடமாற்றம்

கோண்டாவில் குடும்ப பதிவு அட்டை செயலகத்தில் இது வரை நாளும் செயற்பட்டு வந்த சண்டிலிப்பாய், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான செயற்பாடுகள் சங்கானை அவசர அனுமதி வழங்கும் செயலகத்தில் செயற்படும் குடும்ப பதிவு அட்டை செயலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது; என்று போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் நடுவச் செயலகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது: அச்செய்திக் குறிப்பில் மேலும் 'கோண்டாவில் குடும்ப பதிவு அட்டை செயலகத்தில் உடுவில், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கான செயற்பாடுகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும்' எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது;

யாழ் பல்கலைக்கழக விஞ்ஞான பீட

# பரீட்சை முடிவில் அதிருப்தி; மாணவர் பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக விஞ்ஞானபீட மாணவர்கள் இன்று முதல் தமது விரிவுரைகள், பரீட்சைகள், செய்முறைகள் யாவற்றையும் முற்றாகப்பகிஷ்கரிப்பதெனத் தீர்மானித்துள்ளனர்-

இது தொடர்பாக விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்!

**காவேரி சீயாக்காய்ப் பவுடர்**

இன்று தமிழீழத்தில் மிகவும் மக்கள் விரும்பிப் பாவிக்கும் சீயாக்காய் பவுடரின் தரம் நிரந்தரம். சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காதீர்கள் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள்

(7898)

**எம். ஜி. ஆர். திருமணசேவை**

சகல இனத்தவர்களின் சாதகம் எம்மிடம் உண்டு ஏற்கனவே சாதகம் தந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் ரேவ: புண்ணியமூர்த்தி புத்தூர் சந்தி, மீசாலை,

(சி-8986)

**விற்பனைக்கு**

வடமராட்சிவிவசாயிகளே, விவசாய இயந்திரச் சாதனங்கள் நீமிகா உரம், சக்தி இயற்கைப்பசளை, மார்க்கோகின் பூச்சிகொல்லி புலோலி அம்பன் சுநல சேவை நிலையங்களில் விற்பனையாகின்றன.

''மிக்கிலைற்''

(சி-9009)

**விற்பனைக்கு**

''கல்வியின் புதியபாதை''. கல்வி டிப்ளோமா, தொலைக்கல்வி, ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆசிரிய மாணவர்க்கு அவசியமானது. V. A சிவராசா 152,B அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(7938)

**தேவை**

சகலவிதமான விடியோ செற், ரேப்செற் வகைகள், மைக், கமறா மற்றும் எலெக்றோனிக் பொருட்களை நியாய விலை கொடுத்து வாங்கப்படும். தொடர்புகளுக்கு மின்வளம் இல. 8 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-8985)

**புறோயிலர் கோழிக் குஞ்சு விற்பனைக்கு**

1 நாள் புறோயிலர் கோழிக்குஞ்சு உடன் விற்பனைக்குண்டு, ஆஷா கோழிப்பண்ணை 1-ம் கட்டை, பிரதான வீதி பருத்தித்துறை- (7940)

**தவறிவிட்டது**

8-4-94 ஆவரங்கால் சந்திக்கும் மாம்பழம் சந்திக்கும் இடையில் கைச்சங்கிலி தவறிவிட்டது; கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் தரப்படும். (7941)

## போதைப் பொருளுடன் கைது

(கொழும்பு)

போதைப் பொருள்களுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வந்து இறங்கிய இந்தியப் பெண்மணி ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார், இவரிடமிருந்து ரூபா எட்டு லட்சம் பெறுமதியான 4.4 கிலோகிராம் ஹெரோயின் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

திருவனந்தபுரம் விமான நிலையத்திலிருந்து இந்தியன் ஏயர் லைன்ஸ் விமான மூலம் வந்த இப் பெண்மணி பச்சை நிற வழியைப் பயன்படுத்தி விமான நிலையத்திலிருந்து வெளியேற முற்பட்டாரெனவும், எனினும் இவரிடம் சோதனை நடாத்தப்பட்டபோது இப் போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நடுத்தர வயதுடைய இப் பெண்மணி தற்போது பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் விசாரணையும் நடைபெற்று வருகிறது.

# மன்னார் ஆசிரிய பற்றாக்குறை மூன்று பாடங்களே போதனை

(மன்னார்)

மன்னார் பிரதேச பாடசாலைகளில் ஆசிரியர்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக உள்ளது; எனத் தெரிவிக்கப்படுகிறது- இருநூறுக்கும்மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் இம்மாவட்டத்தில் காணப்படுகின்றது ஆசிரிய பற்றாக்குறையினால் மாணவர்களின் கல்வித்தரத்தில் பாதிப்பு ஏற்படும் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது

இங்குள்ள உயர்பாடசாலைகளில் உயர்தர மாணவர்களுக்கு நான்கு பாடங்களுக்குமான ஆசிரியர்கள் இல்லை; மூன்று பாடங்கள் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன; இதனால் நான்கு பாடத்திலும் மாணவர்கள் சித்தியடைய முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் பல்கலைக்கழக வாய்ப்பையும் மாணவர்கள் இழப்பதாக மன்னார் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இதேவேளை நேர் முகப் பரீட்சைநடத்தப்பட்டு நீண்டகாலமாக நியமனத்திற்காக காத்திருக்கும் தொண்டர் ஆசிரியர் 66 பேருக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை எனவும் கூறப்படுகிறது.

## ஆயுர்வேத வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு

ஆண்டுதோறும் ஆயுர்வேத வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. ஆயுர்வேதத்தில் ஆர்வத்தை ஏற்படுத்தவே இத்திட்டம் என ஆயுர்வேத திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயுர்வேத வாரத்தின் போது பல்வேறு மட்டங்களிலும் நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படும்; பாடசாலைகளில் மூலிகைத் தோட்டம் அமைத்தல், பேச்சு, கட்டுரை போட்டி என்பவற்றை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது

ஆயுர்வேதத்துறையை பாதுகாக்க மாகாணங்களில் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன மாகாண ஆயுர்வேத வைத்தியசாலைகளிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தப்படும்;

ஆயுர்வேத மருத்துவ துறையில் புதிய கண்டு பிடிப்புகள் தொடர்பாக ஆய்வு அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்படும்; இவ்வருட ஆயுர்வேத வாரம் ஜூலை 16க்கும் 22க்கும் இடையே அனுஷ்டிக்கப்படும் என திணைக்களம் அறிவித்துள்ளது,

## 1-வது பிறந்த நாள் வாழ்த்து

### செல்வன் பிருதிவிராஜ்

அல்வாய் தெற்கு சின்னாலடியைச் சேர்ந்த கணேசமூர்த்தி - உதயராணி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிருதிவிராஜ் இன்று (05-04-94) தனது முதலாவது பிறந்த தினத்தை மூளைத்தீவு தண்ணீரூற்றில் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அன்பு அக்கா நிரோஷா, அம்மப்பா, அம்மம்மா, அன்ரி, அப்பம்மா, பெரியத்தை குடும்பத்தினர், சின்னத்தை மற்றும் உறவினர்கள் யாவரும் சகலையும் கற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றனர்,

(7869)

## வேலை நிறுத்தத்தால் வேலைகள் பாதிப்பு

சம்பள உயர்வு, ஓய்வூதியம் முதலான கோரிக்கைகளை முன்வைத்து அனைத்து பல்கலைக்கழகதொழிற்சங்க சம்மேளனம் ஒருநாள் வேலை நிறுத்தம்மேற்கொண்டதைத் தொடர்ந்து மானியஆணைக்குழுவின் வேலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன. எழுதுவினைஞர்கள், வாகனச் சாரதிகள், தொலைபேசி இயக்குநர்கள் போன்றோர் வேலைக்கு வராததால் எழுதுவினைஞர் ஆசனங்கள் வெற்றிடங்களாகக் காணப்பட்டன என்றும், பாதுகாப்புஅதிகாரிகள் தொலைபேசி இயக்குநர்களாகக்கடமையாற்றவேண்டி ஏற்பட்டது என்றும் கூறப்படுகிறது

# பொ.ஐ.ஐ.மு. தெற்கில் நன்றி கூறும் கூட்டங்கள்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி தென்மாகாணசபைத் தேர்தலில் கிடைத்த ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் தென்மாகாணத்தில் மூன்று பொதுக்கூட்டங்களை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 8-ம் திகதி மாத்தறையிலும் 9ஆம் திகதி அம்பாந்தோட்டையிலும் 10ஆம் திகதி காலியிலும் கூட்டங்கள் நடைபெறும் மேல்மாகாண சபை முதலமைச்சர்சந்திரிகா குமாரணதுங்கதென்மாகாண சபை புதிய முதலமைச்சர் அமரசிறி தொடங்கொடஆகியோரும் இதில் பேசுவார்கள்

சுதந்திரக்கட்சி தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா வைத்திய சிகிச்சைக்காக இம்மாதம் வெளிநாடு செல்லவிருப்பதால் இக்கூட்டங்களில் கலந்து கொள்ள மாட்டார் என சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன;

## நினைவு கூருகின்றோம்...

### 1994-04-05

1986-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - தாண்டியடிப் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். புவிராஜ்** (ரா, உதயராஜன், கல்லடி, மட்டு)

1987-ம் ஆண்டு மட்டு - கள்ளிச்சை வடமுனைப் பகுதியில் சிறிலங்காப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். தேவன்** (புத்திரசிகாமணி சூரியகுமார், ஏறாவூர், மட்டு)

1988-ம் ஆண்டு இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட யாழ் இந்துக்கல்லூரி உயர்வகுப்பு மாணவனாகிய சுதுமலை வாசி,

1989-ம் ஆண்டு மன்னாரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1991-ம் ஆண்டு அம்பாறை - ஆலடி வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**ஈஸ்வரன்** (... ...)

மட்டு - வாகரை 32-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய.

**கப்டன் குமார்** (இளையதம்பி மோகனகுமார், சந்திவெளி, மட்டு)

**லெப். மனோ** (--- முருகவெட்டை, மட்டு)

**2-ம் லெப் கமலேஸ்** (--- மன்னம்பிட்டி)

**எட்வேட்** (--- மயிலவெட்டுவான், மட்டு)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9008)

# மதுராவின் இரவு மதுரமானது

மதுராவின் கானம்! இனிக்கும் இரவு!

# மதுராவின் தானம்!

# இனிக்கும் இரவு!

## மதுர கானம்!!

## ஏப்பிரல் இருபது!!

மதுரகான மழையினுள் அதிர்ஷ்டசாலி யாரெனக் கண்டிட இனிக்கும் இரவு ஏப்பிரல் இருபது இசைந்தே வாருங்கள்

**இளங்கலைஞர் மன்றம்**

ஆம்

மதுரா ஆதரவாளர்களின் பரிசுத்திட்ட குலுக்கல் நிகழ்வினை சிறப்பிக்கும் வகையில் நிகழவிருக்கும் கலை நிகழ்ச்சிகள்

தலைசிறந்த நாதஸ்வர தவில் மேதைகளின் நாதஸ்வர தவில் கச்சேரி

நவரச நகைச்சுவை கதம்ப நிகழ்ச்சி

கலை பண்பாட்டுக் கழகத்தினரின் "சந்தனக் காடு" - நாடகம்

தமிழீழத்தின் பிரபல்யமான இசைக்குழுவினரான

இராஜன் இசைக்குழுவினரின் இன்னிசைக் கச்சேரி

## "மதுரா ஆதரவாளரின் அதிர்ஷ்டம் பார்த்தல்"

அனுமதி இலவசம்

குறிப்பு:- மதுரா பட்டு மகாலில் புடவை வாங்கும் சிட்டைகள் யாவும் பரிசுத்திட்ட குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் புதுவருடத்திற்கான ஆடைத் தெரிவுகளின்போது மதுரா பட்டு மகாலில் ஆடைகளை தெரிவு செய்து மேலும் சிட்டைகளை சேகரித்து அதிர்ஷ்டசாலியாகும் சந்தர்ப்பத்தை அதிகப்படுத்திக் கொள்ளுங்கள்;

1ஆம் பரிசு தங்கப்பதக்கம்

2ஆம் பரிசு 5000/-

3ஆம் பரிசு 2500/-

பல ஆறுதல் பரிசுகள்

ஓர் ஆண்டு நிறைவை நோக்கும் இப்புத்தாண்டு தினத்தில் மதுரா பட்டு மகாலின் வளர்ச்சி மேலும் சிறக்க வாழ்த்துகின்றோம்

**ராசி பட்டுச் சோலை**
70, 71 A, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.
தரமான தெரிவுகட்கு தவறாமல் நாடவேண்டியது
ராசி பட்டுச்சோலை

**ராகமாலிகா ஆடை அகம்**
4, நவீன சந்தை, (உட்புறம்) யாழ்ப்பாணம்.
தன்னிறைவைப் பெற தயங்காமல் நாடவேண்டியது
ராகமாலிகா ஆடை அகம்

**விதுரா ஆடை அகம்**
34, நவீன சந்தை (உட்புறம்) யாழ்ப்பாணம்.
கண்டவுடன் அகமகிழ்ந்து கொண்டவுடன் அணிந்துமகிழ
விதுரா ஆடை அகம்

(இ-9014)

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பு உடன் நடத்தும் திட்டமில்லை

(கொழும்பு)

வடக்கையும் கிழக்கையும் இணைப்பதா இல்லையா என்பதை தீர்மானிக்க சர்வஜன வாக்கெடுப்பு உடனடியாக நடத்தப்பட மாட்டாது என நம்பகரமாகத் தெரிய வருகிறது இது பற்றி ஆராய்ந்த அரச உயர்மட்டம் இதற்கான முடிவை எடுத்ததாகத் தெரியவருகிறது.

தென்மாகாண சபை தேர்தலில் ஐ.தே.கவிற்கு ஏற்பட்ட தோல்வி கிழக்கு உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படக் கூடாது என கட்சிகளின் கோரிக்கை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இம்முடிவு எடுக்கப்பட்டதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் கொழும்பு தினசரி ஒன்றிற்கு தெரிவித்தார்.

இதனிடையே கடந்த புதனன்று நடைபெற்ற அரச உயர்மட்ட கூட்டத்தில் தென்மாகாண தேர்தல் முடிவுகள் குறித்து ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## வெற்றியும் தோல்வியும் சமமாக ஏற்க வேண்டும்

### ஜனாதிபதி விஜேதுங்கா

(கொழும்பு)

வெற்றியையும், தோல்வியையும் சமமாக ஏற்றுக்கொள்ள மக்கள் பழகிக் கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி டி.பி விஜேதுங்கா கூறியுள்ளார்.

அண்மையில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றிய மத்திய மாகாண விளையாட்டு வீரர்களைப் பாராட்டும் முகமாக நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு பேசிய ஜனாதிபதி மேலும் கூறுகையில், மக்கள் மத்தியில் இந்த முக்கிய பண்பு குறைந்து வருவதன் காரணமாகவே நெருக்கடி நிலைகள் ஏற்பட்டு வருவதாகக்கூறினார்.

## நிர்வாகிகள் தெரிவு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் பருத்தித்துறைப் பிரிவின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பருத்தித்துறை வட-இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் பிரிவுத் தலைவர் பேராசிரியர் வி.க. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இப்பிரிவின் புதிய செயற்குழு போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவாகியிருந்தது. (25)

## ஹமில்டன் மறுப்பு

இராணுவத்தீர்வுக்கு முன்னுரிமை கொடுக்கிறோம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க தெரிவித்ததாக வெளியான செய்தியை அவர் மறுத்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், தன்னைச் சந்தித்த எவரிடமும் தாம் அவ்விதம் கூறவில்லை எனவும் தெரிவித்தார்.

# தென்மாகாண வெற்றிக்கு மேல் மாகாணத்தில் தீர்மானம்

(கொழும்பு)

தென்மாகாண சபைத்தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு வெற்றியைத் தேடித்தந்த தென்மாகாண மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை ஒன்று மேல் மாகாண சபையில் கொண்டு வரப்பட்ட போது அதை எதிர்த்து ஐ.தே.க உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.

இந்தப் பிரேரணையை சபையில் விவாதிக்க வகை செய்யும் விதத்தில் நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி வைக்க வேண்டுமென மேல் மாகாண அமைச்சர்களில் ஒருவரான பெர்னாட் சொய்சா சபையில் அறிவித்த போது இப்பிரச்சினை தலைதூக்கியது.

இப்பிரேரணையை எமது கட்சி எதிர்க்கவில்லை எனினும் மேல் மாகாண மக்களது பல பிரச்சினைகள் தொடர்பாக விவாதிக்க பல விடயங்கள் இருந்தும் அதற்குச் சந்தர்ப்பம் வழங்காமல் அவசர அவசரமாக இந்தப் பிரேரணையை விவாதிக்க எடுப்பதை எமது கட்சி எதிர்க்கிறது என மேல்மாகாண எதிர்க்கட்சித் தலைவரான சுசில் முனசிங்க கூறினார்.

இச்சந்தர்ப்பத்தில் இரு தரப்பு உறுப்பினர்களும் ஒருவருக்கொருவர் காரசாரமான வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டனர். இதைத் தொடர்ந்து தென்மாகாண மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை இன்றைய தினம் விவாதிப்பதா இல்லையா என்பதை அறிய வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது அன்றே விவாதிக்கலாம் என அநேக உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

இதையடுத்து சுசில் முனசிங்க தலைமையிலான ஐ.தே. கவினர் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர். முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்க ஐ.தே.க உறுப்பினர்கள் சபையை புறக்கணித்து வெளிநடப்புச் செய்த பின்னரே சபைக்கு வந்தார்.

## நடுக்கடலில் கப்பலில் பொருள்கள் இருட்டு

கொழும்பு துறைமுக கடற் பிராந்தியத்தில் நிறுத்தப்பட்டிருந்த கப்பல் ஒன்றிலிருந்து 40 வெளிநாட்டு சைக்கிள்களும் 80 பெட்டிகள் நிறைந்த தொலைக்காட்சி மற்றும் வானொலிப் பெட்டிகளின் உதிரிப் பாகங்களும் திருட்டுப் போயுள்ளன.

அமெரிக்காவிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் சென்ற மேற்படி கப்பல் எரிபொருள் நிரப்புவதற்காக கொழும்பு துறைமுகத்தில் தரித்து நின்ற போதே இத்திருட்டு நடைபெற்றுள்ளது.

## மலேரியா குறித்த விழிப்பு மக்களிடம் ஏற்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் "மலேரியா தடுப்பு வாரமாக" பிரகடனப் படுத்தப்பட்டு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை மலேரியா நோய் பற்றிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது என்று இதனுடன் சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு வாரகாலத்தில் மலேரியா பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்குகள், சிரமதானங்கள், மலேரியா நோயைப் பரப்பும் நுளம்புகளை அழிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவை காரணமாக யாழ். குடாநாட்டில் இந்நோயின் கொடுமை பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இது மலேரியா தடுப்பு வாரத்தின் வெற்றி என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மலேரியா நோய்த் தடுப்பிற்கான பல நடவடிக்கைகள் மேலும் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மலேரியா நோயை ஒழிப்பதில் யாழ்ப்பாணப் பத்திரிகைகளின் பங்கும் பெரிதாகத் தேவைப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(இ) (பா)

## சந்திரசேகரன் சத்தியப்பிரமாணம்

(கொழும்பு)

மத்திய மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் இன்று ஏப்ரல் 5-ம் திகதியன்று மாகாணசபை உறுப்பினராக சத்தியப்பிரமாணம் செய்து பதவியேற்கவுள்ளார்.

இதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருப்பதாக மத்திய மாகாணசபையின் தலைவர் சரத் கோன்கஹகே கூறியுள்ளார்.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த திரு. சந்திரசேகரன் அண்மையில் பிணையில் விடுவிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

## காமினி குறித்த டி.பியின் திட்டத்திற்கு பலத்த எதிர்ப்பு

காமினி திஸநாயக்கவை பாராளுமன்ற உறுப்பினராகவும், பின்னர் இவ்வாரஇறுதியில் அமைச்சராகவும் ஆக்கும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் திட்டத்திற்கு பிரதமர் ரணில்விக்கிரமசிங்க, அமைச்சர் சிறிசேன குரே ஆகியோர் பலத்த எதிர்ப்பு காட்டி வருவதாக பி.பி.ஸியின் கொழும்பு முகவர்களில் ஒருவரான ஹாசியன் ராஜகருணாநாயக்ககூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், அமைச்சர் சிறிசேன குரேயை கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலிருந்தும் அமைச்சர் பதவியிலிருந்தும் நீக்குவதற்கும் ஜனாதிபதி முயற்சி செய்து வருவதாகவும் தெரிவித்தார்.

## பிரேமா குடும்பத்தினரை ஐ.தே.கவில் சேர்க்க முயற்சி

### தென்மாகாண தோல்வியின் எதிரொலி

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஜனரஞ்சகமான போக்கு கைவிடப்பட்டதுடன் பிரேமதாசா யுகம் இருட்டடிப்பு செய்யப்பட்டமையினால் ஐ.தே.க தோல்வியுற்றதாகக் கருதும் ஐ.தே.கவின் சிரேஷ்ட தலைவர்கள் பிரேமதாசா குடும்பத்தினரை மீண்டும் கட்சியின் முன்னணிக்கு கொண்டு வருவதில் தீவிரமாகியுள்ளனர்.

இவ்வகையில் திருமதி ஹேமா பிரேமதாசா மற்றும் மகன் சஜித் பிரேமதாசா போன்றோரைகட்சியின் முன்னணிப் பதவிகளுக்குகொண்டு வருவதுடன் பிரேமதாசா காலத்தில் அமுல்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பற்றியும் மேலும் தீவிர பிரசாரம் மேற்கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

இவ்வாறு பி.பி.சியின் கொழும்பு முகவர்களில் ஒருவரான ஹாசியன் ராஜகருணாநாயக்க பி.பி.சிக்கு தெரிவித்துள்ளார்.

# இலட்சியத்திற்கான போராட்டம் காத்திரமான இலக்கியத்திற்கு காரணம்

### - சுபமங்களா ஆசிரியர்

(மட்டக்களப்பு)

இலங்கையில் இருப்பிற்காக இலட்சியத்திற்காகப் போராடும் நிலை உள்ளமையும் அனுபவத் தழும்புகளும் காத்திரமான இலக்கியங்கள் வெளிவரக் காரணமாகும் எனத் தமிழக சஞ்சிகை 'சுபமங்களா' ஆசிரியர் கோமல்சுவாமிநாதன் தெரிவித்தார்.

அண்மையில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார். இக்கருத்தரங்கு கிழ...

...காணப்படுவதாலும், அனுபவத் தழும்புகளாலும் காத்திரமான இலக்கியங்கள் வெளிவருகின்றன. இன்னும் வெளிவரும் இதனால், அடுத்த நூற்றாண்டு தமிழிலக்கியத்திற்கு ஈழத்து இலக்கியம் வழிகாட்டும்.

தமிழகத்தில் இன்று குறிக்கோளற்ற நிலை காணப்படுகிறது. சமூகம் சிந்தனைகள் தேய்ந்து குடும்ப மட்டத்திற்கு சுருங்கி வருகிறது, அர...

...போக்கு காணப்படுகிறது. தமிழகத்தில் இனிமாவும், இலக்கியமும் நுகர்வு கலாசாரமாகவே உள்ளது. இவற்றின் உள்ளடக்கமும் கருத்துக்களும் மக்களை சிந்திக்க முடியாதவர்களாக்கி விடுகிறது.

போராடும் சமூகத்திலும், விடுதலை பெற்ற சமூகத்திலும் நல்ல இலக்கியங்கள் தோன்றும். போராட்டகால ரஷ்ய இலக்கியங்களும் பிரெஞ்சு புரட்சிக்கால இலக்...

## அடையாள அட்டை இன்மையினால் பரீட்சை எழுதுவதற்கு அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம்நடைபெற்ற மக்கள் வங்கி ஆட்சேர்ப்பு போட்டி பரீட்சையின்போது பரீட்சை எழுதவந்த சில மாணவர்கள் அவர்களிடம் ...கள் தம்முடன் எடுத்துச் சென்ற அத்தாட்சிப் படுத்தப்பட்ட புகைப்படத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என பரீட்சை மேற்பார்வையாளர்கள் கூறி இப் பரீட்...

## போனஸ் உறுப்பினர் தெரிவு கம்யூனிஸ்ட் கட்சி அதிருப்தி

(கொழும்பு)

தென்மாகாண சபைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில் நியமிக்கப்பட்ட இரு போனஸ் உறுப்பினர்கள் விவகாரம் இந்த முன்னணியில் அங்கம் வகிக்கும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிக்கு மனத்தாங்கலை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

போனஸ் உறுப்பினர்களாக யார் யாரை நியமிப்பது என்பதை பொதுஜன ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுக் குழுவே தெரிவு செய்ய வேண்டும். கடந்த மாகாணசபை தேர்தலையடுத்து நடந்த போனஸ் உறுப்பினர் தெரிவில் இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டது. எனவே இந்த தேர்தலிலும் அந்த நடைமுறையே பின்பற்றப்பட வேண்டுமென கம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது. இந்த செயற்குழுவை கலந்து கொள்ளாமல் ஏற்கனவே செய்யப்பட்ட முடிவை மாற்றுமாறும் கம்யூனிஸ்ட் கட்சி கோரியுள்ளது.

## மொரட்டுவ பல்கலையில் கடற்பொறியியல் துறை

(கொழும்பு)

எதிர்வரும் மேமாதம்முதல் மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் கடற்பொறியியல் (Marine Engineering) பட்டப் படிப்பு கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்தகைய தொரு பாடநெறி இலங்கையில் ஆரம்பிக்கப்படுவது இது முதற்தடவையாகும்.

தொடர விருப்புபவர்கள் அவுஸ்திரேலியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளிலுள்ள பல்கலைக்கழகங்களிலேயே பாடநெறியை தொடரவேண்டியிருந்தது. மொரட்டுவ பல்கலைக்கழகம் ஆரம்பிக்கும் இப்பாடத்திட்டத்திற்கு யுனெஸ்கோ உதவியளிக்கவுள்ளது. 30 வார பாடநெறியாகஇது...

மாணவர்கள் அவர்களிடம் ஆள் அடையாள அட்டை இல்லாத காரணத்தினால் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

ஆள் அடையாள அட்டை இல்லாத இப் பரீட்சார்த்தி யாளர்கள் கூறி இப் பரீட்சார்த்திகளை பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியேற்றினர்; இதனால் இவர்கள் பரீட்சைஎழுத முடியாத நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

...க்கு பல்கலைக்கழகக் கலைப் பீடாதிபதி கலாநிதி சி. மௌனகுரு தலைமையில் நடைபெற்றது. அங்கு கோமல் சுவாமிநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் விடுதலை பெற்ற சமூகத்திலும், விடுதலையை நோக்கிபோராடும் சமூகத்திலும் நல்ல காத்திரமான இலக்கியங்கள் தோன்றும்; தமிழகத்தில் சுதந்திரத்தின் பின் மகோன்னத இலக்கிய நிலை இல்லை. அன்றாடம் பொழுதைக் கழித்தால் போதும் என்ற நிலை உள்ளது. ஆனால் இலங்கையில் இருப்பிற்காக இலட்சியத்திற்காக போரிடும் நிலை

...திற்கு சுருங்கி வருகிறது. அரசியல் ரீதியான பதவிகளை அடைவதற்கான போராட்டங்களே அங்கு நடைபெறுகிறது

மூன்றாம் உலக நாடுகளின் ஆளும் வர்க்கம் எதனைக் கலை வெளிப்பாடு என நம்புகின்றதோ மக்களும் அதனையே கலை என நம்பும்

பிரெஞ் புரட்சிக்கான இலக்கியங்களும் இதற்கு உதாரணமாகும்; அதேபோல இலங்கையிலும், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்தவர்களால் மேற்கு நாடுகளிலும் படைக்கப்படும் இலக்கியங்கள் காத்திரமானவை என கோமல் சுவாமிநாதன் மேலும் தெரிவித்தார்;

முதற்தடவையாகும்.

இதுவரைஇப்பாடநெறியை 30 வார பாடநெறியாகஇது இருக்கும்;

## விடைத்தாள்கள் இந்த வாரம் செல்லும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மக்கள் வங்கிக்கு ஆட்சேர்ப்பதற்காக நேற்று முன்தினம் நடாத்தப்பட்ட போட்டிப்பரீட்சை மற்றும் தொழில்நுட்பக்கல்லூரி பரீட்சை விடைத்தாள்கள் என்பன இந்த வாரமே கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படவுள்ளன.

இவற்றை எடுத்துச்செல்ல தற்கு பரீட்சைத் திணைக்களத்திலிருந்து வந்த அதிகாரி ஒருவர் யாழ்ப்பாணத்தில் தங்கியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த அதிகாரியே குறிப்பிட்ட பரீட்சைக்குரிய வினாத்தாள்களை கொழும்பிலிருந்து எடுத்துவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(தி) (பா)

## அரசசார்பற்றநிறுவனங்கள் உரம் எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து உரம் கொண்டுவரும் முயற்சியில் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

கடந்த ஆண்டும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் கொழும்பிலிருந்து உர வகைகளை எடுத்துவந்து விவசாயிகளுக்கு விநியோகித்தது தெரிந்ததே; அதேபோன்று இவ்வாண்டும் உரம் எடுத்துவந்து விநியோகிப்பதற்கான முயற்சியில் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன.

இதன்ஓரங்கமாக உரத்தை எடுத்துவருவதற்கு தேவையான பணத்தினை அரச அதிபரிடம் கொடுத்துள்ளதாக அரசசார்பற்ற நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்;

(இ) (க)

## பண்டிதர் குடியிருப்பில் மலேரியாதீவிரம்குறைந்தது

(தென்மராட்சி)

பண்டிதர் குடியிருப்பு முகாம்களில் மலேரியா நோய் மிகவும் குறைந்து காணப்படுகின்றது.

கடந்த ஒருமாத காலப்பகுதியில் இப் பகுதி அகதிமுகாம்களில் தங்கியுள்ளோர் இம் மலேரியா நோயினால் மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தார்கள் தற்போது சுகாதாரப் பகுதியினர் மலேரியா தடுப்பு நடவடிக்கையினை மேற்கொண்டு வருவதால் பலர் நோயினை மாற்றியுள்ளார்கள்; இதற்கு முன்னர் மேற்படிப் பகுதியில் அகோரமாக இந்நோயினால் சராசரி ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொருவர் வீதம் பாதிக்கப்பட்டுஇருந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (86)

## விளக்க உரை

(வடமராட்சி)

போசாக்கின் அவசியமும் நோய்த் தடுப்பு வழிகளும் தொடர்பான கருத்துரை, ஆய்வுரை, கலந்துரையாடல், செயல்முறை விளக்கவுரை சம்பந்தமான நிகழ்வு ஒன்று கடந்த ஞாயிறன்று பருத்தித்துறை மேலதிக அரசாங்க அதிபர் திரு ஆ சிவசாமி தலைமையில் தொண்டைமானாறு செருடாவில் இந்துக் கலவன் பாடசாலையில்நடைபெற்றது.

இந்நிகழ்வின்போது மாணவர்கள் பயிற்சியாளர்களின் பேச்சு, பொருட்காட்சி, செய்முறைகள் என்பனவற்றுடன் பொதுச்சுகாதாரம், போசாக்கும் சமூக சுகாதாரமும், கால்நடையும் போசாக்கும், தாய்சேய் நலத்திட்டம், ஆயுர்வேத வைத்தியமும், போசாக்கும், நீரால் பரவும் நோய்கள், சத்துணவும் வீட்டுத் தோட்டமும், சத்துணவும் நோய்க் கட்டுப்பாடும், பனை வளமும் போசாக்கும், சத்துணவும் நோய்த்தடுப்பும் என்பன பற்றிய கருத்தரங்குகள் அவ்வப்பகுதித் துறையைச் சேர்ந்தவர்களால் விளக்கமளிக்கப்பட்டன; (யோ)

## யாகப்பர் மண்டபம் சிற்றாலயமானது

(குருநகர்)

குருநகர் புனித யாகப்பர் மண்டபம் சிற்றாலயமாக மாற்றப்பட்டுள்ளது பெரிய வியாழன் அன்று நடைபெற்ற திருப்பலி அவ்வாலயத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டது;

புனித யாகப்பர் ஆலயம் சிறிலங்கா விமானப்படை 'சுப்பர் சொனிக்' குண்டு வீச்சில் சேதம் அடைந்திருப்பது அறிந்ததே

ஆலய நிர்மாண வேலைகள் பூர்த்தியாகும் வரை மண்டபத்தில் உருவாக்கப்பட்டுள்ள சிற்றாலயத்தில் வழிபாடுகள் தற்காலிகமாக நடைபெறும்; (21)

## ஆயுதங்களுடன் பொலிசார் பஸ்ஸில் செல்ல தடை

(மன்னார்)

பொலிசார் ஆயுதங்களுடன் இ.போ.ச பஸ்களில் இலவசப்பயணம் மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும்; இவ்வாறு மன்னார் பிராந்திய இ.போ.ச. அத்தியட்சகர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் பிரதேச அரசாங்க செயலகத்தில் அரசாங்க அதிபர் எம்.எம். குருஸ் தலைமையில் நடைபெற்ற அரசியல் கட்சிகள் மற்றும் தொண்டர் ஸ்தாபனப் பிரதிநிதிகளுக்கான கலந்துரையாடலில் உரையாற்றிய மன்னார் பிராந்திய இ.போ.ச. அத்தியட்சகர் தமது உரையில் மேலும் மன்னார் பிரதேச இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள் தற்போது ஏழு பஸ்கள் மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றன, இது பொதுமக்களைத் திருப்திப்படுத்தப் போதுமானதாக இல்லை. இதே வேளை மன்னாருக்கும் தலைமன்னாருக்கும் இடையேயான பஸ் சேவைகளில் ஒவ்வொரு பஸ்ஸிலும் முப்பதுக்கும் மேற்பட்ட பொலிசார் ஆயுதங்களுடன் தினசரி பயணம் மேற்கொள்கின்றனர், இதனால் பயணிகளுக்கு அசௌகரியம் ஏற்படுவதுடன் இ.போ.சவுக்கும் நட்டம் ஏற்படுகிறது. ஆகவே பொலிசார் இச்செய்கையை மாற்றுவதற்கான நடவடிக்கையை பொலிஸ் அத்தியட்சகர் மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்;

## அமெரிக்க அமைச்சர் மட்டக்களப்பு விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கு தற்போது விஜயம் செய்துள்ள அமெரிக்காவின் தென் ஆசிய விவகாரங்களுக்கான உதவி அமைச்சர் திருமதி ரபின் ராபெல் மட்டக்களப்பிற்கு அண்மையில் விஜயம் செய்துள்ளார்.

இவர் கொழும்பில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில், இலங்கை இனப்பிரச்சினையில் நேரடியாக தலையிடும் நோக்கம் அமெரிக்க அரசுக்கு கிடையாது என்றும் தென்னாசியப் பிராந்தியத்தில் அமைதியும் சமாதானமும் நிலவுவதையே அமெரிக்கா விரும்புகிறது என்றும் தெரிவித்து இருக்கிறார்.

## பாம்பை எடுத்து வந்தவர் பஸ்ஸில் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

மாத்தறையிலிருந்து தங்காலை சென்று கொண்டிருந்த பிரயாணிகள் பஸ் வண்டி ஒன்றில் பாம்பை எடுத்து வந்த நபர் ஒருவர் பயணிகளால் நையப்புடைக்கப்பட்ட சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளது;

பஸ் வண்டியில் திடீரென பின்புற ஆசனத்தின் கீழிருந்து 'உஸ்', என்ற ஓசை மீண்டும் மீண்டும் கேட்கவே பிரயாணிகள் கிலியடைந்தனர். அவ்வேளை சிறுவன் ஒருவன் பாம்பைக்கண்டுபாம்பு பாம்பு என்று கூச்சலிடவே பிரயாணிகள் மேலும் கிலியடைந்து கூச்சலிட பஸ்வண்டியும் நிறுத்தப்பட்டது. பின்புற ஆசனம்அருகே 8 அடிநீளமான நாகபாம்பு ஒன்று படம் எடுத்தவாறு காணப்பட்டது பயணிகள் அனைவரும் தமது இருக்கைகளின் மேலே ஏறி நின்று பாம்பை அடியுங்கள் அடியுங்கள் என்று கூச்சலிட்டனர்.

அவ்வேளை பஸ்பிரயாணிகளில் ஒருவர் பயப்பட வேண்டாம் அது எனது பாம்பு. எனக்கு தெரியாமல் கூடைக்குள் இருந்து வெளியே வந்துவிட்டது என்று கூறியவாறே அதைப்பிடித்து மீண்டும்தனது கூடைக்குள் போட்டார்;

ஆத்திரத்தில் இருந்த அனைவரும் கோபத்துடன் அந்தப் பாம்பாட்டியை பஸ்ஸினுள் வைத்து நையப்புடைக்கவே அப்பாம்பாட்டியும் பஸ்ஸை விட்டு இறங்கி ஓடினார்.

## சடலம் மீட்பு

தொண்டமானாறு கோயில் பகுதியில் உள்ள கடலில் இளைஞரின் சடலம் ஒன்று கடந்த வெள்ளியன்று கண்டெடுக்கப்பட்டு மீட்கப்பட்டது.

இச்சடலம் நவிண்டில் என்னுமிடத்தைச் சேர்ந்தவரது என பின்னர் அறிய முடிந்தது; (யோ)

## வருடாந்த உற்சவம்

சண்டிலிப்பாய் சீரணி இறி நாகபூஷணி அம்பாள் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் 25ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறும்.

அன்னை பூபதி நினைவாக

# தென்மராட்சிப் பகுதிகளில் சிரமதானப் பணிகள்

(தென்மராட்சி)

தியாகதீபம் அன்னை பூபதியின் 6-ம் ஆண்டு நினைவாக தென்மராட்சிப் பகுதியெங்கும் சிறப்பாக அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றன.

தென்மராட்சிப் பகுதி எங்கும் தனியார், அரசகாரியாலயங்கள், பொது இடங்களில் உருவப்படம் வைக்கப்பட்டு பந்தல்கள் அலங்கரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டவைரீதியாகவும், கிராமப்புறங்களிலும் பெரியளவிலான முறையில் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அத்தோடு சில இடங்களில் அன்னை பூபதியின் தியாகத்தினை வெளிப்படுத்தும் பாடல்களும் ஒலிபெருக்கியில் இசைக்கப்பட்டு வருகின்றது. அத்தோடு தென்மராட்சிப் பகுதியில் ஆங்காங்கே சிரமதானங்களும் இடம்பெற்று வருகின்றன. இன்றிலிருந்து கொடிகாமம் போக்கட்டிப் பகுதியில் அமைந்துள்ள பேராக குடியேற்றத்திட்டமும் புனரமைக்கப்படவுள்ளது. இதேவேளை சாவகச்சேரி மருத்துவமனையை சாவகச்சேரி வர்த்தக சங்கத்தினர் அன்னை பூபதி நினைவாக சிரமதானமூலம் வேலைகளைச் செய்துவருகின்றனர். மேலும் பல இடங்களில் இச்சிரமதான வேலைத்திட்டம் இடம்பெற்றுவருகின்றது. (86)

## இடம்பெயர்ந்தோர்முகாமில் மலசலகூடங்கள் அமைப்பு

தேச நிர்மாணிகளினால் கோப்பாய், நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் உள்ள ஐந்து இடம்பெயர்ந்தோர் முகாம்களில் மலசலகூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி மலசலகூடங்கள் இந்து, விக்னேஸ்வரா, கட்டுடை, டயனி, மணியரசன் ஆகிய இடம்பெயர்ந்தோர் முகாம்களில் அமைக்கப்பட்டுள்ளன. இதனால் இவ்வளவு காலமும் அம் முகாம்களில் காணப்பட்டு வந்த சுகாதாரச் சீர்கேடுகளும், அதன் விளைவாக பரவி வந்த பல்வேறு வகைப்பட்ட தொற்று நோய்களும் தொடர்ந்தும் அம்மக்களைப் பாதிக்கா வண்ணம் தடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## கண் சத்திர சிகிச்சை சாவகச்சேரியில்இடம்பெறும்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் கண் பாதிக்கப்பட்டவர்களுக்கான கண்ணில் வெண்விழிப்படல சத்திர சிகிச்சை எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மருத்துவமனையில் இடம் பெறவுள்ளது.

கடந்த மாதம் முதலாம் திகதி சாவகச்சேரி மருத்துவமனையில் டாக்டர் திரு. குகதாசன் அவர்களால் 30 கண் நோயாளருக்கு கண் பரிசோதிக்கப்பட்டது. இதில் தெரிவு செய்யப்பட்ட ஒரு பகுதியினரான 15 பேருக்கே எதிர்வரும் 10ஆம் திகதி இச்சத்திர சிகிச்சை இடம்பெறவுள்ளது. இதேபோன்று தொடர்ந்தும் இந்த சிகிச்சை இடம் பெறவுள்ளது. இச்சிகிச்சையினை லயன் கழகத்தினர் ஒழுங்கு செய்து வருகின்றனர். (86)

## விவசாய அறிமுக அட்டை மன்னாரில் விநியோகம்

தமிழீழ விவசாயிகளிடையே அவர்கள் எதிர் நோக்கும் தடைகளையும் பிரச்சினைகளையும் குறைக்கும் வகையில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிமுகப்படுத்தி, விநியோகித்து வரும் கமக்காரர் அறிமுக அட்டை விநியோகம் தொடர்பான ஆரம்ப வேலைகள் தற்போது மன்னார் மாவட்டத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு எடுக்கப்பட்டு வரும் தொடர் நடவடிக்கையில் ஒரு கட்டமாக மன்னார் மாவட்டத்தில் உயிலங்குளம் பெரியபண்டி விரிச்சான், இலுப்பைக்கடவை, விடத்தல்தீவு, ஆட்காட்டிவெளி, பூநகரி போன்ற இடங்களில் தொடர் கலந்துரையாடல்களை நடாத்தி விளக்கப் பயிற்சிகளை வழங்க, மன்னார் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

## அரசியல்வாதிகளுக்கே இனத்துவேஷம் உள்ளது

உலக சுகாதார ஸ்தாபன உதவியுடன்

## மலேரியா ஒழிப்பிற்கு புதிய திட்டம் வகுப்பு

(கொழும்பு)

மலேரியா நோயை கட்டுப்படுத்துவதில் புதிய முறையைக் கையாள மலேரியா ஒழிப்பு இயக்கம் ஏற்பாடு செய்துள்ளதாக இதன் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். அடுத்த இரு வருடங்களில் மலேரியாவால் பீடிக்கப்படுவோர் எண்ணிக்கை 25 சதவீதமாக குறைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபன ஆலோசனைப்படி இப்புதிய திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் மலேரியாவினால் வருடாந்தம் ஒரு லட்சம் பேர் பீடிக்கப்பட்டனர். இக்காலப் பகுதியில் வருடாந்தம் மலேரியா நோயினால் 100 பேர் இறந்தனர். தற்போது மரண வீதம் குறைந்து வருகிறது.

## நிஹால் பெரேரா தற்கொலை?

(கொழும்பு)

தேச விமுக்தி ஜனதா கட்சியின் தலைவர் நிஹால் பெரேரா நாரஹேன்பிட்டியவிலுள்ள தமது இல்லத்தில் துப்பாக்கிச்சூட்டுக்காயங்களுடன் இறந்து கிடக்கக் காணப்பட்டுள்ளார். இவரது மரணம் தற்கொலையாகவும் இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## எள்செய்கைக்கு கடனுதவி

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால், கிளிநொச்சிக் கோட்டத்தைச் சேர்ந்த அறுபது பயனாளிகளுக்கு எள் செய்கைக்காகக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிக் கோட்டத்தைச் சேர்ந்த கண்டாவளை பகுதியில் இக்கடனுதவி வழங்கப்பட்டுள்ளது.

## கிணறு ஆழமாக்க முயற்சி

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வனிதா குடியிருப்பில் நிலவிவரும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்குடன்

# தற்காலிகமாக தங்குவோரும் மன்னாரில் பதிவு வேண்டும்

மன்னார் தீவினுள் பிரவேசிப்போர் தங்களிடம் மன்னாரில் நிரந்தர குடியிருப்பாளருக்கான அல்லது தற்காலிக குடியிருப்பாளர்களுக்கான அடையாள அட்டை பெற்றிருக்க வேண்டும் என படையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த அடையாள அட்டைகள் இல்லாதுவிடின் ஒருநாளுக்கான அனுமதி அட்டையை மன்னார் நகரத்திற்குள் பிரவேசிக்கும் முன்னர் உள்ள தடை முகாம்களிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இத்தகைய அடையாள அட்டைகள் மாலை 4 மணி வரையே செல்லுபடியாகும். அதற்கு மேல் மன்னாரில் இருப்பதானால் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலிருந்து அல்லது பிரவுன்ஸ் கட்டடத்திலிருந்து மறுநாள் காலை 6 மணி வரை தங்கியிருக்க அனுமதி அளிக்கும் அனுமதிச் சீட்டு பெற்றுக்கொள்ள வேண்டும்.

வெளியாரை தங்க வைத்திருக்கும் வீட்டுரிமையாளர்களும் அவர்களை பொலிசில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒருதினத்திற்கான அனுமதி சீட்டுடன் குறிப்பிட்ட கால எல்லைக்கு பின்புநகரத்தில் அல்லது வேறு இடத்தில் காணப்பட்டால் அவர் இராணுவத்தினரால் கைதாவார்.

மன்னார் வழியே கொழும்புக்கு அல்லது வடக்கிற்கு பிரயாணம்செய்வோர் அதற்கான படிவங்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலிருந்தோ அல்லது வழிதடையிலிருந்து பெற்று அதிலுள்ள விபரங்களை பூரணப்படுத்தி கொடுத்து அனுமதி பெறவேண்டும். சோதனைச் சிட்டொன்று மன்னார் நகரிலுள்ள எல்லா வீடுகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வீட்டிலும் தனது குடும்பத்தினர் ஒன்றாய் இருந்து எடுத்த புகைப்படமொன்று தொங்கவிட வேண்டும். இது சோதனை அதிகாரிகளுக்கு குடும்ப உறுப்பினர்களை அடையாளம் காண உதவும் என படைத் தரப்புகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் தீவில் அனைத்து வாகனங்களும் பதிவு செய்யப்பட்டு அதற்கான அனுமதியை பெற்றிருக்கவேண்டும். உரிமையாளர்இல்லாத வேறு நபர் வாகனத்தை செலுத்தும்போது அனுமதிச் சீட்டின் பிரதி இருப்பதுடன் புதிய சாரதி குறித்து 24 மணி நேரத்திற்குள் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தில் அறிவிக்க வேண்டும்.

மன்னாரில் இருந்து வடபகுதிக்கு எடுத்துச் செல்ல தடை செய்துள்ள பொருட்களை வியாபாரிகள் அல்லது வேறு எவரேனும் வீடுகளில் வெறுமனே வைத்திருப்போர் அதற்கான பொறுப்பை ஏற்க வேண்டும் என படையினர் எச்சரித்துள்ளனர்.

## தேர்தல் முடிவுகளால் இருவர் தற்கொலை

(கொழும்பு)

தென்மாகாணத்தில் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தல்களினால் பெலியத்தையில் இரு தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பெலியத்தை கட்டமுல என்ற பகுதியில் குடும்பஸ்தர் ஒருவர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வெற்றியைக் கொண்டாடுவதற்காகப் பட்டாசு வாங்க மனைவியிடம் பணம் கேட்டார். மனைவி பணம் கொடுக்க மறுக்கவே மனமுடைந்த நிலையில் அவர் விஷமருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இதே பகுதியில் தமையனும், தங்கையும் ஐ.தே.க வின் தோல்வியை அறிந்துகொண்ட அவர்களது சகோதரர்களில் ஒருவர் தனது சாரத்தினால் தூக்குப் போட்டு தற்கொலை செய்துகொண்டார்.

## ஔவையார் விழா

ஆத்திசூடி சிறிசித்தி விநாயகர் ஆலயத்தில் மூன்றாம் ஆண்டாக ஔவையார் விழா எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சிறப்புரைகள் ஔவையார் வரலாறு வில்லுப்பாட்டு, கவியரங்கு, ஔவையாரின் பாடலில் செறிந்துள்ளது அறக்கருத்துகளா, பக்தி கருத்துக்களா என்ற தலைப்பில் பட்டிமன்றம், இன்னிசை என்பனவும் இடம் பெறும்.

## 3000 கடவுச்சீட்டு

குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் நாளாந்தம் 3000 கடவுச் சீட்டுக்களை வழங்கி வருகிறது. 15 லட்சம் ரூபா வருமானம் இதனால் நாளாந்தம் கிடைக்கின்றது. பிரதேச செயலக மட்டத்தில் கடவுச் சீட்டு விநியோகம் செய்வது குறித்த புதியதிட்டம்பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என திணைக்கள கட்டுப்பாட்டாளர் ஆரியசேனா கூறினார்.

# செலாவணிக் கட்டுப்பாடுகள் மத்திய வங்கி நீக்கியது

(கொழும்பு)

தற்போதைய சர்வதேச கொடுக்கல் வாங்கல்களுடன் சம்பந்தப்பட்ட சகல அந்நிய செலாவணிக் கட்டுப்பாடுகளையும் உடனடியாக விலக்கிக் கொள்வதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது. பெரும்பாலான கட்டுப்பாடுகள் ஏற்கனவே நீக்கப்பட்டிருப்பினும் எஞ்சியிருந்த சில கட்டுப்பாடுகளும் இதன் மூலம் நீக்கப்பட்டுள்ளன.

இத்தாராள மயமாக்கலின் மூலம் பொருள்கள் மற்றும் சேவைகளின் ஏற்றுமதி இறக்குமதிக்கான தற்போதைய கொடுப்பனவுக்கான வெளிநாட்டுச் செலாவணியை வழங்கும் தேச சேவைக்கானகட்டணங்கள் போன்றவற்றின் வருமதிகள் கூட நடைமுறை கொடுக்கல் வாங்கலாகவே கருதப்படும். சொத்துக்களை பெறுவது தொடர்பான மூலதனக் கொடுக்கல் வாங்கல்களில் மட்டும் சிலவகை செலாவணிக் கட்டுப்பாடுகள் தொடர்ந்தும் உள்ளன. மேலும் ஏற்றுமதியாளர்கள் தமது ஏற்றுமதி வருமானத்தை கட்டுப்பாடுகள் இன்றி வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நாணயத்தில் கொண்டு வரவும்முடியும்

## மாணவர் அரங்கு

கடந்த 28 - 3 - 94 அன்று மாணவர் அரங்குப் பகுதியில் அருள் நேசன் எழுதிய விஞ்ஞானத் தொடரின் மிகுதித் தொடர்நேற்றைய மாணவர் அரங்குப் பகுதியில்

## எத்தனை கருத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டன

சு. க. எம். பி கேள்வி

(கொழும்பு)

1993 ஆம் ஆண்டு நடத்தப்

## அரசியல்வாதிகளுக்கே இனத்துவேஷம் உள்ளது

### ஐ. தொ. கா. தலைவர்

(கொழும்பு)

சாதாரண சிங்கள மக்களுக்கு இனத்துவேஷத்தில் அக்கறை இல்லை என்பதையே தென்மாகாணத்தில் ஐ. தே. கவுக்கு ஏற்பட்ட நிலைகாட்டுவதாக ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் வி. பி. கணேசன் தெரிவித்துள்ளார்.

இத்தேர்தல் பிரசாரத்தின் போது பற்பல தேவையற்ற விடயங்கள் பேசப்பட்டன. வடகிழக்கில் காணப்படுவது இனப்பிரச்சினை அல்ல கிழக்கிலிருந்து வடக்கை பிரிக்க வேண்டும் போரை யாழ்குடாவிற்குள் மட்டுப்படுத்தி பின் அதற்கு முறையான வைத்தியம் செய்யப்பட வேண்டும். இதற்குதென் மாகாண சிங்கள மக்கள் ஆணை வழங்கவேண்டும் என்ற அணிற்கு பிரசாரங்கள் செய்யப்பட்டன. ஆனாலும் தென்பகுதியின் பெரும்பான்மை சிங்கள மக்கள் இனவாத கூச்சல்களுக்கு சரியான பதிலடி கொடுத்துள்ளனர்.

இனவாதம் சிங்கள மக்களிடையே இல்லை. இருப்பது அரசியல்வாதிகளிடமே என்பது தெளிவாகி விட்டது. எனவே இனி இப்படியான இனவாத அரசியலுக்குத்தான் வைத்தியம் தேவை எனதென் பகுதி சிங்கள மக்கள் தீர்ப்பு வழங்கியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய அதிபர் நியமனம்

யா- கச்சாய் மகாவித்தியாலயத்திற்கு புதிய அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார். இப்பாடசாலையில் கடமை புரிந்த அதிபர் திரு. ந. நடராஜராஜா அவர்கள் இடமாற்றத்தில் சென்றதை அடுத்ததற்போது இப்பாடசாலைக்கு யா- உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் முன்னாள் II-ம் தர அதிபராக கடமையாற்றிய திரு. க. அம்பலவாணர் அவர்கள் சென்றமாதம் அதிபராகக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (86)

நாவற்குழி வெளிநாட்டு குடியிருப்பில் நிலவிவரும் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கு தீர்வுகாணும் நோக்குடன் இங்குள்ள கிணறுகளை ஆழமாக்கி கல்லால் கட்டுவதற்கும் தேச நிர்மாணிகளின் உதவியுடன் குடியிருப்பில் நிரந்தர மலசலகூடம் அமைப்பதற்கும் அறவழிப் போராட்டக் குழுவினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிகிறது. (22)

னித் தொடரின் மிகுதித் தொடர்நேற்றைய மாணவர் அரங்குப் பகுதியில் தவிர்க்க முடியாத காரணத்தினால் வெளிவரவில்லை. இத் தொடர் அடுத்த வாரம் வெளியாகும் என்பதை மாணவர்களுக்கு அறியத் தருகிறோம்.

சேவைகளின் ஏற்றுமதி இறக்குமதிக்கான தற்போதைய கொடுப்பனவுக்கான வெளிநாட்டுச் செலாவணியை வழங்குவதற்கான பூரண சுதந்திரம் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதைவிட ஓய்வூதியக் கொடுப்பனவு, வெளிநாடுகளில் வேலைசெய்பவர்களின் வருமானம், கமிஷன்கொடுப்பனவுகள் பல்வேறாக சர்வ

## அரசதோட்ட முகாமைத்துவம் ஜூலையில் மாற்றங்கள்

(கொழும்பு)

அரசுக்குசொந்தமாகவுள்ள தோட்டங்களின் முகாமைத்துவம் தொடர்பாக எதிர்வரும் ஜூலை முதல் மாற்றங்கள் பலவற்றை செய்ய அரசு உத்தேசித்துள்ளது. இதன்படி இத்தோட்டங்களின் உரிமையில் பத்து சதவீத பங்கு தோட்டத் தொழிலாளர்களுக்கு இலவசமாக வழங்கப்படும் என பெருந்தோட்ட தொழிற்துறைஅமைச்சர்ரூபா கருணா திலக தெரிவித்துள்ளார்.

அரசுக்கு சொந்தமான தோட்டங்களின்மூலதன முதலீட்டை அதிகரித்து அதன் மூலம் அதிகளவு வசதிகளை பெற்றுக் கொடுப்பதையும் உற்பத்தியை பெருக்குவதையும் நோக்கமாகக்கொண்டு பிரதேச தோட்டக் கம்பனிகளின் பங்குகளை தோட்ட முகாமைகம்பனிகள் விலைக்கு பெற அனுமதி வழங்குவதென அரசு தீர்மானித்துள்ளது. தோட்ட நிர்வாகம் தொடர்ந்தும் அரசுக்கு சுமையாக இருக்காத விதத்தில் இத்தீர்மானம் அமுல் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சிரமதானப்பணி

திபாகச்சுடர் அன்னை பூபதி நினைவாக யாழ் மாவட்டநகைத்தொழிலாளர்சங்கம் யாழ் ஓட்டுமடசந்தியிலிருந்து அராலி வீதியில் நேற்று முன் தினம் சிரமதானப்பணிகளில் ஈடுபட்டனர். இச் சிரமதானப்பணியில் அத்தியடி, சுண்டிக்குளிவடக்கு, பாரதி சனசமூக நிலையங்களும் கலந்துகொண்டனர்.

## பிணையில் செல்வதற்கு எதிரிக்கு அனுமதி

(கொழும்பு)

பிணை மறுக்கப் படக்கூடிய பயங்கரவாத தடைச்சட்ட வழக்கில் எதிரி பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இந்த அனுமதியை மேல் நீதிமன்ற நீதிபதி சி. வி. விக்னேஸ்வரன் வழங்கினார்.

முறக்கொட்டாஞ்சேனையைச்சேர்ந்த பத்தன் அருணாசலம் என்பவரே 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவராவார்-சுற்றிவளைப்பில் 19-8-92 அன்று கைதான இவர் 16-7-93 அன்று விடுதலையானார். 9-12-93 இல் சட்டமா அதிபர் தயாரித்த குற்றப்பத்திரிகை தொடர்பாக மன்றினால் விடுக்கப்பட்ட அழைப்பாணையின் பேரில் இவர்நீதிமன்றம் வந்தார்- குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டது.

இவரைபிணையில் செல்ல அனுமதிக்குமாறு இவர் தரப்பில ஆஜரான சட்டத்தரணி நீதிபதியைக்கோரினார். நீதிபதி தனது தீர்ப்பில் எதிரியின் கையேழுத்து அறிக்கை இங்கு இல்லை-எனவே இன்று தண்டனை வழங்க முடியாது. சட்டத்தரணி பிணைகோருகிறார். 16-4-93 இல் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் உத்தரவின் பேரில் இவர் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்- எனவே எதிரியை 1000 ரூபா பிணையில் விடுவிக்கிறேன் என்றார்.

(கொழும்பு)

15 ஆயிரம் கருத்திட்டங்களின் கீழ் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, அம்பாறை உட்பட அனைத்து மாவட்டங்களிலும் எத்தனை கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன, என்று சுதந்திரக்கட்சி எம். பி ஒருவர் கேள்வி எழுப்பவுள்ளார்.

உணவுக்கூட்டுறவுத் துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சியிடம் எழுத்துமூல விடைக்கான வினாவாக இதனைக் கேட்க கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பி நிமால்சிறிபால டி சில்வா முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

### சு. க. எம். பி கேள்வி

1993 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மாகாணசபை தேர்தலுக்கு முன்னர் இலங்கை முழுவதிலும் உள்ள பிரதேச செயலகப்பிரிவுகளில் 15 ஆயிரம் கருத்திட்டங்களை ஆரம்பித்துப் பூர்த்தி செய்வதாக அரசு உறுதியளித்ததை அமைச்சர் அறிவாரா? இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் எத்தனை கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவோ? அவற்றிற்கு செலவிடப்பட்ட தொகை என்ன? என்ற ரீதியில் இவர் வினா வெழுப்ப முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.


## பேணுநர்கள் தேவை

8 மாதம் தொடக்கம் 12 வயது வரையிலான குழந்தைகளைப் பேணுவதற்கு பேணுநர்கள் தேவை.

ஊதியமாக 2500/- வழங்கப்படும்.

குழந்தையின் வயதிற்கேற்ப கூடுதல் படிகள் வழங்கப்படும். வயதெல்லை 25 — 50 வரை.

உங்கள் விண்ணப்பங்களை 10-04-94 ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னதாக அனுப்பிவைக்கவும். கல்வித் தகைமைக்கேற்ப முன்னுரிமை வழங்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:-

ஈழநாதம்
நல்லூர்,
யாழ்ப்பாணம்

செஞ்சோலை நிர்வாகத்தினர்

(7933)



## 45-ம் நாள் நினைவஞ்சலி

அமரர்

ஒரேற்றர் சி. சுப்பிரமணியம்

(முன்னாள் ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,
முன்னாள் அதிபர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்)

''கல்விக்கடலில் கரைகளை விளக்கானீர்
கனிவான பேச்சால் எமையெல்லாம் கவர்ந்தீர்
கலங்கி நாமிருக்க நெடுந்தூரம் சென்றீர்''

உம் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

டாக்டர் எஸ். சோதிநாதன்,
156, பொன்னாலை வீதி.
கட்டுடை - மானிப்பாய்.

(7937)

நல்லூர் ...

சிந்தனைக்கு

விளையாட்டு வினையாகலாகாது

—தமிழ்ப் பழமொழி

# ஈழநாதம்

51, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 05-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாக பீடம் 2023
தபால் பெட்டி எண் 05

## விளையாட்டுக்கு மாசு

திறமைகளை வெளிக்காட்டுவதற்கும், உயர்ந்த மனோபக்குவத்தை வளர்ப்பதற்காகவுமே விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன. ஆனால், நேற்று முன்தினம் புனித யாகப்பர் தேவாலய கட்டட நிதிக்காக பாடுமீன் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இறுதி நேரத்தில் பெரும் கைகலப்பில் முடிந்துள்ளமை பெரிதும் கவலைக்கும், கண்டனத்திற்கும் உரியதாகும்.

விளையாட்டுப் போட்டிகளில் தவறுகள் நடப்பது வழமையான தொன்றுதான்; அதைத் தடைசெய்யும் நோக்கிலேயே இன்று நுட்பமான விதிமுறைகள் ஆக்கப்பட்டுள்ளன. அதனை அமுல் செய்வதற்கென விளையாட்டுக் களத்தில் மத்தியஸ்தர்களும் விடப்படுகின்றனர்.

இந்நிலையில், விளையாட்டின்போது நிகழும் தவறுகளுக்கு விளையாட்டு வீரர்கள் சட்டையில் பிடிப்பதோ அன்றி, அடிதடியில் இறங்குவதோ ஏற்றுக்கொள்ளக் கூடியதோ, அனுமதிக்கக் கூடியதோ அல்ல; இது விளையாட்டுத் துறைக்கே களங்கமாகும்.

விளையாட்டின்போது நிகழும் தவறுகளுக்கு மத்தியஸ்தரின் தீர்மானமே இறுதியானதாகும்; விளையாட்டு வீரர்கள் மத்தியஸ்தரின் தீர்ப்பை ஏற்று நடந்து கொள்ளப் பழக வேண்டும். அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் ஆடுகளத்தை விட்டு வெளியேற்றப்பட வேண்டும். அதன் பின்னர் விளையாட்டு வீரர் இழைத்த தவறின் அடிப்படையில் அவருக்கு அத் தொடரில் அல்லது ஒரு காலப்பகுதி வரை போட்டிகளில் விளையாடுவதற்கு தடை விதிக்கப்படல் வேண்டும். இவை நாம் உருவாக்கிக் கூறும் புதிய விதிகள் அல்ல; சர்வதேச ரீதியில் கடைப்பிடிக்கப்படும் சாதாரண விதிமுறைகள்.

இதேவேளை, விளையாட்டு முடிந்த பின்னர் மத்தியஸ்தரின் தீர்ப்பு குறித்து அதிருப்தி இருப்பின் தீர்ப்பு சரியானதா, பிழையானதா என்பது பற்றி ஆராயப்படல் வேண்டும். தீர்ப்பு தவறாயின் அது விரும்பிச் செய்யப்பட்டதா? அன்றி தவறுதலாக செய்யப்பட்டதா என்பதைக் கண்டறிய வேண்டும். தீர்ப்பு திட்டமிட்ட தவறாக வழங்கப்பட்டிருப்பின் மத்தியஸ்தர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன்பின்னர் அவருக்கு வேறு போட்டிகளில் மத்தியஸ்தம் வகிக்கும் சந்தர்ப்பம் வழங்கப்படக் கூடாது.

இதைவிடுத்து, விளையாட்டுக் களத்தில் அடிதடியில் இறங்குவது விளையாட்டு வீரர்களின் குறுகிய மனப்பாங்கை வெளிக்காட்டும் செயல் என்றே கொள்ள முடியும். அத்தோடு, உதைபந்தாட்டமோ, துடுப்பாட்டப்போட்டியோ

# காங்கிரசுடன் தேர்தல் உடன்பாட்டிற்கு ஜெயலலிதா நிபந்தனைகள் விதிப்பு

காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் உறவைப் புதுப்பித்துக்கொள்வதற்காக சில நிபந்தனைகளை அ.தி.மு.க தலைமை விதித்துள்ளது. ஒருமுறை பொதுத் தேர்தலின் போது உடன்பாடு ஏற்பட்டால் அந்த உடன்பாடு அடுத்த தேர்தல் வரை நீடிக்க வேண்டும். இடைத்தேர்தலின் போது ஒரு நிலை ராஜ்யசபை தேர்தலின்போது ஒரு நிலை என மாறிக் கொண்டே போவதை ஏற்க முடியாது என காங்கிரஸ் மேலிடப் பிரதிநிதிகளிடம் ஜெயலலிதா உறுதியாகக் கூறிவிட்டதாகத் தெரிகிறது.

இடதுசாரி கட்சிகளுடன் தி.மு.க செய்து கொண்ட உடன்பாடு எப்படி இடைத்தேர்தலிலும் ராஜ்யசபைத்தேர்தலிலும் நீடிக்கிறதோ அதுபோல் ஒரு ஏற்பாடுவேண்டும் என அ.தி.மு.க மேலிடம் பிரதமர் மற்றும் மூத்த காங்கிரஸ் தலைவர்களிடம் கூறிவிட்டதாம். இதை மூப்பனார், வாழப்பாடி இராமமூர்த்தி ஆகியோரிடம் காங்கிரஸ் மேலிடம் தெரிவித்திருக்கின்றது. உடனே அவர்கள் ஆத்திரப்பட்டு மேலிடத்திடம் தமது முறைப்பாட்டை வெளியிட்டனர்.

கடந்த பொதுத்தேர்தலில் பழனி மக்களவை தொகுதியிலிருந்து காங்கிரஸ் அ.தி.மு.க கூட்டணிஅடிப்படையில் வெற்றி பெற்றவர் சேனாபதிக் கவுண்டர். அவர் மறைவையடுத்து கடந்த ஆண்டு இடைத்தேர்தலில் என்ன நடந்தது? பழனித் தொகுதியை முன்புபோல் காங்கிரசுக்கு விட்டுக்கொடுக்கவில்லை. அ.தி.மு.க தவிர தன்னிச்சையாகத் தனது வேட்பாளரையும் அறிவித்தது அ.தி.மு.க என இவ்விருதலைவர்களும் முறையிட காங்கிரஸ் மேலிடம் விழித்துக்கொண்டது.

காங்கிரஸ் கட்சியுடன் உறவு முறிந்துவிட்டது என்று முதலில் அறிவிப்பு செய்தவரே ஜெயலலிதா தான்: அப்படி இருக்கும் போது, அவர் எப்படி நிபந்தனை விதிக்க முடியும்? அ.தி.மு.க உறவுகோரி போயஸ் தோட்டத்துக் கதவுகளைத் தட்டச் செல்லும் மத்திய அமைச்சர்களுக்கு கொஞ்சம்கூட மானம் மரியாதை கிடையாது என சரமாரிகாக வாழப்பாடியும் மூப்பனாரும் பொரிந்து தள்ளினர்.

இப்போது உடனடியாகப் பொதுத்தேர்தல் எதுவும் நடைபெறப்போவதில்லை. தேர்தல் வரும்போது அ.தி.மு.க மேலிடமே காவடி ஏந்திவரும் சத்தியமூர்த்திபவன் காங்கிரஸ் அலுவலகம் கதவுகளைத் தட்டும். அப்போது பார்த்துக்கொள்ளலாம்என்று ஒருமித்தகருத்தை தமிழகாங்கிரசார் பலர் கூறியுள்ளனர்

இதேசமயம் - ''இவர்களுடைய ஜம்பம் வீறாப்பு எல்லாம் எவ்வளவு தூரம் எத்தனை நாட்களுக்கு என்பதை எங்கள் தலைவி துல்லியமாகவே எடைபோட்டுவைத்திருக்கிறார். எனவே, கதவைத் தட்டப்போவது காங்கிரசா அல்லது அ.தி.மு.காவா என்பது விரைவில் தெரியும் என்கின்றனர் அ.தி.மு.கவின் சில அமைச்சர்கள்.

தமிழ்நாட்டிலிருந்து ராஜ்ய சபைக்கு தெரிவான அங்கத்தினர்களில் ஆறுபேரின் பதவிக்காலம்அடுத்தஆண்டு ஜூலை 25ஆம் திகதியுடன் முடிவடைகிறது இவர்களில் எஸ் கே டி இராமச்சந்திரன் (காங்கிரஸ்) ஏ நல்லசிவன் (இடது கம்யூனிஸ்ட்) முரசொலிமாறன் திண்டிவனம் ஜி. வெங்கட்ராமன், ஜே எஸ். ராஜு விடுதலை விரும்பி (நால்வரும் தி.மு.க) ஓய்வுபெறுகின்றனர்.

தற்போது தெரிவான 234 அங்கத்தினர் கொண்ட தமிழகசட்டசபையில் மயிலாப்பூர் பெருந்துறை ஆகியஇருதொகுதிகளைச் சேர்ந்த எம் எல் ஏக்கள் இறந்து விட்டதால் வெற்றிடமாக உள்ளது அதாவது 232பேர்தான் இப்போது சபையில் உள்ளனர்.

இந்நிலையில் 232 அங்கத்தினர்களும் ராஜ்ய சபைத் தேர்தலில் வாக்களிப்பதாக வைத்துக்கொண்டால் சட்டப்பேரவையில் பெற்றுள்ள இடங்களின் அடிப்படையில் துளியும் சந்தேகமின்றி மாநிலங்களவையில் இத்தேர்தலில்நான்கு இடங்களை அ.தி.மு.க கைப்பற்றிவிட முடியும் மாநிலங்களவையில் ஒரு இடத்தைக் கைப்பற்ற சட்டசபை அங்கத்தினர்கள் 33பேரின் முழுவாக்கை பெறவேண்டும். 61 அங்கத்தினரைக்கொண்ட இந்திரா காங்கிரஸ் கட்டுக்கோப்பான நிலையில் இல்லாமல் தவிக்கிறது. ஏற்கனவே கட்சிக்கட்டுப்பாட்டை மீறியதற்காக ஆறு பேர் மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கவேண்டும் என காங்கிரஸ் மேலிடத்திற்கு தமிழக காங்கிரஸ் சிபாரிசு செய்துள்ளது. எனவே கட்சியிலிருந்து நீக்கம் எனும் கத்தி அவர்களுக்கு மேல் தொங்கிக்கொண்டிருக்கும் நிலையில் ஒரு இடத்திற்கு மேல் காங்கிரஸ் கைப்பற்ற முடியாது. தன்னிடமுள்ள மேலதிக வாக்குகள் மற்றும் இரண்டாவது வாக்குகளைப்போடும் வகையில் இன்னோர் இடத்தை அ.தி.மு.க, எளிதில் பெற்றுவிட முடியும்.

கடந்த ஆண்டு இறுதியில் நடந்துமுடிந்த சட்ட மன்றத் தேர்தல்களில் உத்தரப்பிரதேசம் உட்பட சிலமாநிலங்களில் காங்கிரஸ் தோல்வியைத்தழுவிய நிலையில் ராஜ்யசபையில் தனது அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்ள காங்கிரஸ் கட்சிக்கு வாய்ப்பில்லை.

இந்தப் பின்னணியில் தான் மேல்சபையில் தனது கட்சியை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கத்தோடு அ.தி.மு.கவின் உதவி காங்கிரசுக்கு மிகவும் தேவைப்படுகிறது. எனவேதான் உறவுகொள்ளத்துடிக்கிறது காங்கிரஸ். இதை நன்றாகவே அறிந்து வைத்துள்ள ஜெயலலிதா அரசியல் சதுரங்கத்தில்தனதுகாய்களை மிக லாவகமாக நகர்த்துகிறார்.

நன்றி: ஜூனியர் விகடன்

# உதயசூரியன் சின்னம் ஒருபோதும் முடக்கப்பட விடமாட்டோம்

## மு. கருணாநிதி சூளுரை

(சென்னை)

உதயசூரியன்சின்னம் முடக்கப்பட விடமாட்டோம். இவ்வாறு தி.மு.க தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார்.

சிதம்பரனார் மாவட்ட தி.மு.க சார்பில் தூத்துக்குடி நகரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு திரு மு கருணாநிதி உரையாற்றினார். அப்போது அவர் கூறுகையில்,

தி.மு.க வளர்வதை எதிர்காலத்தில் தடுக்க ஒரு சிலர் தூண்டி விடப்பட்டுள்ளனர் வம்புசெய்து மேலும் அரசியல் செய்து நான் தான் தி.மு.க என்று வாதிட்டு உதயசூரியன் சின்னத்தை முடக்கிவிடப் பார்க்கிறார்கள். அவர்களின் எண்ணம் வெற்றி பெற்றால் அதை தமிழ்நாடு தாங்குமா? சியை வளர்க்க அவர்களின் பெயரை லேபலாக எடுத்துக் கொள்கிறார்கள். ஏழை தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களை தங்கள் பக்கம் இழுக்க இதைப் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் அண்ணா மற்றும் பெரியாரின் லட்சியங்களை ஏற்றுக்கொள்வோர் அல்ல அதற்கு மாறாக இருக்கிறார்கள்

தி.மு.கவை வீழ்த்திவிடலாம் அழித்துவிடலாம் என்று யார் யார் மனப்பால் குடிக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம் தக்கபதில் கொடுக்க நான் கடந்த சில நாட்களாக தமிழகமெங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறேன் எவ்வளவு உயரத்திலிருந்து தி.மு.க விழுந்தாலும் தாங்கிக்கொள்வதற்கு நீங் ...

காட்டிக்கொடுக்க பேரம் செய்ய புறப்பட்டனர், அடுத்த தேர்தலில் தி.மு.கவை தோற்கடிக்க நாங்கள் உங்களுக்கு உதவ எட்டப்பராக இருக்கிறோம். சுக்கிரீவனாக இருக்கிறோம் உதயசூரியன் சின்னத்தைக்கூட இல்லாமல் செய்துவிடுகிறோம் என்று பேரம் பேசப்பட்டது மூன்று நாட்கள்காணாமல்போனார் என்று வீரபாண்டி ஆறுமுகம் பேசினார் அந்த மூன்று நாட்களும் ஆளும் கட்சியின் வீட்டிலிருந்தார் ஒன்று சொல்லுகிறேன் உதயசூரியன்சின்னத்தை இழக்காது. இது அண்ணாவழங்கிய சின்னம் இது யாருக்கும் வேண்டாம் என்று முடிவுஎடுக்கும் நிலையில் நீ துரோகம் செய்தால் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் பொறுக்கக் ...

# பாலத்தீன பொலிஸ்படை இஸ்ரேல் இணக்கம்

எகிப்திய தலைநகர் கெய்ரோவில் இஸ்ரேல் மற்றும் பாலத்தீனிய விடுதலை இயக்கப் பிரதிநிதிகள் சந்தித்து பாலத்தீனியர்களின் சுயாட்சி மற்றும் காஸா ஜெரிக்கோ பிராந்தியங்களில் பாலத்தீனிய பொலிஸ்படையின் அமைப்பு என்பன உட்பட பல்வேறு விடயங்கள் பற்றியும் பேச்சு நடத்தவுள்ளனர்.

பத்தாயிரம் பேரைக் கொண்ட பொலிஸ் படையை பாலத்தீனியர் அமைப்பதற்கு இஸ்ரேஸ் இணங்கியிருப்பதாகவும் ஜோர்தான் அரசு பாலத்தீனிய இஸ்ரேல் உடன்பாட்டை வரவேற்பதாகவும், பாலத்தீனிய வட்டாரங்களிலிருந்தும், ஜோர்தான் அரசு வட்டாரங்களிலிருந்தும் தெரியவருகிறது.

எனினும் ஹெப்ரோன் பகுதியில் குடியேற்றப்பட்டிருக்கும் யூதர்கள் நிராயுதபாணிகளாக்கப்படும் வரை அல்லது வெளியேற்றப்படும் வரை இப்பகுதியில் பாதுகாப்புக்கு தொடர்ந்தும் உத்தரவாதம் இருக்குமா என்பது கேள்விக்குரியதே என்று ஜோர்தானிய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்

# பப்புவா நியூகினியில் மலேரியாவுக்கு 160பேர் பலி

(சிட்னி)

பப்புவா நியுகினியில் மலேரியா நோயினால் பீடிக்கப்பட்டு 160 நோயாளிகள் மரணமடைந்துள்ளதாக அறிவிக் ...

உயிரிழந்தவர்களில் 60 சதவீதமானோர் ஐந்து வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகள் எனத் தெரியவருகிறது: 37 ...

கை வெளிக்காட்டும் செயல் என்றே கொள்ள முடியும் அத்தோடு, உதைபந்தாட்டமோ, துடுப்பாட்டப்போட்டியோ அடிதடிக்கான விளையாட்டல்ல, அதற்கென குத்துச் சண்டை, கராட்டி, யூடோ, மற்றும் மல்யுத்தம் போன்ற விளையாட்டுக்கள் உண்டு. ஆனால், அவற்றிற்குக் கூட கடும் விதிகள் அமுல்படுத்தப் படுகின்றன.

இதேவேளை, விளையாட்டு ரசிகர்கள் விளையாட்டுப் போட்டிகள் திறம்பட நடத்துவதற்கு ஒத்துழைப்பு தர வேண்டுமே ஒழிய அதனைக் குழப்புவதற்கோ அன்றித் தாமதிப்பதற்கோ காரணமாகக் கூடாது. சில இடங்களில் ரசிகர்களின் கட்டுமீறிய செயல்களே வன்முறைகளுக்கும், அடிதடிகளுக்கும் காரணமாக அமைந்து விடுவதுண்டு; சிலசமயம் விளையாட்டு வீரர்களுக்கு இடையில ஏற்படும் சிறு மூறுகல் நிலைகள் பெரும் மோதல்களாக ஆவதற்கும் காரணமாகி வருகின்றது

ரசிகர்கள் தாம் சார்ந்த அணிகளின் வெற்றிக்காக குரல் எழுப்பவோ, அன்றி மகிழ்ச்சியைத் தெரிவிக்கவோ வேண்டாம் என்று எவரும் கூறவில்லை. ஆனால், அவை விளையாட்டைக் குழப்பவோ, தடை செய்யவோ கூடாது என்பதே முக்கியமானது;

ஆனால், நேற்று முன்தினம் உதைபந்தாட்டப் போட்டியில் ரசிகர்கள் நடந்து கொண்டவிதம் எல்லை மீறிய செயலாகும். இது ரசிகர்களைப் பாதிப்பதை விட அவர்களின் சார்பு விளையாட்டுக் கழகங்களின் பெயருக்கே மாசு கற்பிக்கக் கூடியதாகும். ஆனால், சம்பவங்கள் இவ்வளவு தூரம் பாரதூரமாக இல்லாது விட்டாலும், சில பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளில் கூட ரசிகர்களின் நடவடிக்கைகள் விளையாட்டை தாமதப்படுத்துவதாகவும் இடையூறு செய்வதாகவும் அமைவதுண்டு. இதனை இம்முறை யாழ் மத்திய கல்லூரி - பரியோவான் கல்லூரி ஆகியவற்றிற்கு இடையில் நடந்த மாபெரும் துடுப்பாட்டபோட்டியிலேயே அவதானிக்க முடிந்தது; இதில் உள்ள துயர் என்னவென்றால், இதற்குக் காரணமானவர்கள் கல்லூரிகளின் பெயரால் இதற்றில் ஈடுபடுவதுதான்; இது அக் கல்லூரிகளிற்கே களங்கத்தை தேடிக் கொடுப்பதாகும்;

இந்நிலையில்; விளையாட்டுப் போட்டிகள் எந்த நோக்கத்திற்காக நடத்தப்படுகின்றனவோ அந்த நோக்கத்தில் இருந்து வழுவிச் செல்வதாகவே உள்ளது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும், விளையாட்டுக்கள் குழு மோதலுக்கும், ஊர் சண்டைகளுக்கும் வழிவகுக்கக் கூடாது. இதனை உறுதி செய்து கொண்டு விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டியது விளையாட்டு ஏற்பாட்டாளர்களின் கடமை; அதைச் செய்ய முடியாது விட்டால் ஏற்பாடு செய்யாமல் இருப்பதே மேல்;

---

எண்ணம் வெற்றி பெற்றால் அதை தமிழ்நாடு தாங்குமா? உதயசூரியன் சின்னத்தை நாம் விட்டுவிடமாட்டோம். அதற்காக நாம் கடைசிவரை போராடுவோம். அப்படி இல்லை என்றாலும் உடன்பிறப்புகளே நீங்கள் இல்லையா? தலைவர்கள் இல்லையா? தி.மு.க செய்த தொண்டு மக்களுக்கு தெரியாதா?

அண்ணா. எம் ஜீ ஆர், கருணாநிதி, ஜெயலலிதா யார் முதல்வராக இருந்தாலும் மாநிலத்துக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்பதில் எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை.

1927ஆம் ஆண்டு நீதிக்கட்சி நடந்தபோதே சுந்தரபாண்டியனார் கட்சிமாநாட்டில் மாநிலத்துக்கு மேலும் அதிகாரம் வேண்டும் என்றார். இந்தஇயக்கம் பெரியார், அண்ணா வரலாற்றில் வந்த இயக்கம்- தமிழ்நாட்டில் உண்மையான கம்யூனிஸ்ட் தி. மு. க தான் என்று ஜீவானந்தத்தை வைத்துக்கொண்டு அண்ணா கூறினார்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற கொள்கை, மூடநம்பிக்கையற்றசமுதாயத்தை உருவாக்கவேண்டும் என்று தி.மு.க பணியாற்றி வருகிறது. பெரியார்-அண்ணாவின் பெயரை உச்சரிப்பவர்கள் கட்...ந்து தி. மு. க விழுந்தாலும் தாங்கிக்கொள்வதற்கு நீங்கள் இங்கு லட்சக்கணக்கில் கூடியிருக்கிறீர்கள் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு 1944-45லிருந்து இந்த குருகுலத்தில் பெரியாரின் குடியரசு அலுவலகத்தில் உடைந்த நாற்காலியில் இருந்து இந்தக் கை எழுதியது பெரியாரோடு பழகிய நாட்கள்- ஈ.வி.கே சம்பத்தோடு பழகிய காலம். நண்பர் ஆர் டி முத்துவுடன் இருந்தகாலம் எல்லாம் இருந்தது. இப்போதுள்ள காலத்தையும் எண்ணிப்பார்க்கிறேன். நீ எல்லாம் தலைவனா என்று சொல்லும் காலத்தையும் எண்ணிப்பார்க்கின்றேன்

இடைத்தேர்தலில் அனைத்து அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்தும், வாக்காளர்களுக்கு பணத்தை வாரி இறைத்தபோதும், புதிய சாலை, கிணறு, பஸ்வசதி என்று செய்து கொடுத்த போதும் அன்று இருந்த வித்தியாசம் எங்கே -இன்று இருந்த வித்தியாசம் எங்கே - என்று எண்ணிப்பார்த்தார்கள். இவர்களை விட்டுவிட்டால் பொதுத்தேர்தலில் அதிகவாக்குகளை திமுக பெறவுள்ளது என்றுஎழுதியதுவிபீடணர்கள் கிடைக்கமாட்டார்களாஎன்று எண்ணினார்கள். தி.மு.கவை ...

... செய்தால் தமிழ்நாட்டு மக்களாகிய நீங்கள் பொறுத்துக் கொண்டிருக்கமாட்டீர்கள் உங்கள் எழுச்சியை தேர்தல் மூலம் காட்டுவீர்கள் எனவும் தெரிவித்தார்.

... பட்டு 160 நோயாளிகள் மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் பலியானோர் தொகை இதைவிட இருமடங்கு என சில செய்திகள் கூறுகின்றன.

... எனத் தெரியவருகிறது. 37 ஆயிரம் மக்களுக்கு ஒரு சுகாதார அதிகாரி மட்டுமே உள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

# தென் ஆபிரிக்கத் தேர்தல் திட்டமிட்டபடி நடக்கும்

## நெல்சன் மண்டேலா வலியுறுத்து

நேட்டால் மாகாணத்தில் வன்முறைகள் பரவினாலும் தென்ஆபிரிக்காவின் தேர்தல் திட்டமிட்டபடி நடந்தேதீரும் என ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கூறியுள்ளார்.

தேர்தலை ஒத்திவைக்குமாறு இன்காத்தா சுதந்திரக் கட்சித் தலைவர் புத்த லெஸ்ஸி வலியுறுத்தி வருகிறார், ஆனால் தேர்தல் திட்டமிட்டபடி இம்மாதம் 26-ம் 28-ம் திகதிகளில் நடைபெறும் என்றார்.

நேட்டால் மாகாணத்தில் இடம்பெறும் வன்முறைகள் ஒழிக்கப்படவேண்டும் கடந்த மாதம் முழுவதும் நடைபெற்ற வன்முறைகளால் 270 க்கும் அதிகமானோர் இறந்துள்ளனர். நேட்டால் நெருக்கடியை தீர்க்க தாமதமின்றி ஆவன செய்யவேண்டும் என மண்டேலா கேட்டுக் கொண்டார்,

# ஜெயின் கமிசன் வாக்கு மூலத்தில் வவுனியா காடு பற்றி குறிப்பிடாதீர்

## கருணாநிதி கூறியதாக வை. போபாலசாமி

ஜெயின் கமிசனுக்கு கொடுத்த வாக்குமூலத்தில் வவுனியாக் காடு என்று எழுதக் கூடாது எனச் சொன்னவர் தி. மு. க தலைவர் கருணாநிதிதான் என வை. கோபாலசாமி தெரிவித்தார்.

சென்னையை அடுத்துள்ள திருநின்றவூரில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில், ஒரு காலகட்டத்தில் கோபாலசாமி விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு கொடுத்தான் அதனால்தி.மு.க ஆட்சிகவிழ்ந்தது என்று பேசினார். தற்போது தூத்துக்குடியில் ஈழத் தமிழர்களை ஆதரித்ததால் ஆட்சி கவிழ்ந்தது என்று கூறுகிறார். இந்த முன்னுக்கு பின் முரணான பேச்சு ஏன்? எங்களுக்கு தேவையானது எல்லாம் நேர்மையான ஆட்சி உண்மையான ஆட்சிஎங்களுக்கு புனித ஜார்ஜ் கோட்டை பற்றிய கனவு எல்லாம் கிடையாது

இந்த கூட்டத்தில் ரூபா பத்தாயிரம்தந்தனர் இதைக கூட கலைஞர் வேறுவிதமாக பேசுவார். ஜெயலலிதா அம்மையார் கொடுத்தார் என்று கூறுவார். தி மு க இயக்கத்தை கலைஞர் நாசம் செய்து விட்டார். இதை தடுக்கத்தான் நான் பாடுபடுகிறேன். எங்கள் அரசியல் ஆலோசனை குழுவில் பெருந்துறை மயிலை இடைத் தேர்தலில் யாரை நிறுத்துவது என முடிவு செய்யப்படும்.

இந்து மா சமுத்திரம் போன்று மக்கள் வெள்ளத்தைப் பார்க்கும்போது எங்களுக்கு எத்தனை துன்பங்கள் வந்தாலும் தூள் தூளாகும் ஆற்றல் வந்துவிட்டது பகல் 12 மணிக்கு நெருப்பு சுடுகிற அளவிற்கு வெப்பம் வாட்டுகிறது- என் தோளோடு தோள் நிற்கின்ற இந்த இளைஞர் கூட்டத்தை ஒரு நல்ல வழிக்கு கொண்டு செல்ல வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது வருகின்ற வழியில் நம் இளைஞர் பட்டாளத்தினர் எதிரே வரும் வாகனத்தை எல்லாம் மறித்து வை- கோ வருகிறாரா என்று அதிகார தோரணையில் மிரட்டினர், இது நமக்கு நல்லது அல்ல இது வெல்லாம் நமது பழையஎஜமானர் கலைஞருக்குத்தான் மிகவும் பொருத்தமாக இருக்கும்- மக்களுக்கு பலவித பிரச்சினைகள் இருக்கும் அதை கருத்தில் கொண்டு அவர்கள் பாராட்டும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் ஏற்கனவே காலில் விழும் கலாசாரத்தை நிறுத்த வேண்டும் என்று கூறினேன் நிறுத்தி விட்டீர்கள் இதே போல் வாகனத்தை மறிக்கும் கலாசாரத்தையும் நிறுத்த வேண்டுமென கோருகிறேன்- எனவும் தெரிவித்தார்;

### நிர்ணயிப்பு

வியட்நாமும், கம்போடியாவும் பிராந்திய எல்லை தொடர்பான பிணக்கைத் தீர்த்து வைக்கும் முகமாக தொழில்நுட்பக் குழுவொன்றை நியமனம் செய்துள்ளன இரு நாடுகளுக்கும் இடையிலான பொது எல்லையை நிர்ணயிக்க இக் குழு செயற்படவுள்ளது!

### புலிகளின் குரல் வானொலி நிகழ்ச்சி நிரல்

1994-04-05 செவ்வாய் இரவு

8 01 ற்கு- அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''அன்னையாத தியாக தீபமே''

8-10 ற்கு- அறிந்து கொள்ளுங்கள்-தகவற் களஞ்சிய நிகழ்ச்சி

8-20 ற்கு- நல்ந்தானா - நிகழ்ச்சி இரத்த சோகைக்குரிய காரணங்களும் அதற்கான சில ஆலோசனைகளும் இடம் பெறும்.

8 30 ற்கு - செய்திகள்

8 40 ற்கு- கருத்துக் களம்

8 50 ற்கு- களமும் கானமும்- திசை தெரிந்த பறவை

1994-04-06 புதன் காலை

7-02ற்கு- மாவீர வணக்கம்

7-15ற்கு- அன்னை பூபதி நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''ஈகத்தாய்''

7-25ற்கு-நீங்கள் கேட்டவை

7-45ற்கு - செய்திகள்.

7-50ற்கு - பத்திரிகைச் செய்திகள்

7-55ற்கு- தாயகப்பாடல்.

# இந்திய மீனவர் மீது சிறிலங்கா கடற்படை சூடு

(சென்னை)

கோட்டைப் பட்டினம் கரைக்கப்பால் ஆழ் கடலில் நேற்று முன்தினம் இரவு சிறிலங்கா கடற்படையினர் இந்திய மீனவப் படகு ஒன்றின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் இந்திய மீனவர் ஒருவர் படுகாயமடைந்தார். இவர் தஞ்சாவூர் மருத்துவமனையில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளார்.

இவருடன் சென்ற வேறு மூன்று மீனவர்கள் காயமேதுமின்றி தப்பினர்.

அண்மைக்காலமாக தமிழ் நாடு மீனவர் மீது சிறிலங்கா கடற்படையினர் நடாத்தி வரும் தாக்குதல்கள் அதிகரித்து வருவதும் இதற்கு கடும் ஆட்சேபனைகள் தெரிவிக்கப்பட்டு வருவதும் தெரிந்ததே.

புலமைப்பரிசில் விண்ணப்பம்

## வியாழனுக்கு முன் ஒப்படைக்கவும்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப் பணம் வழங்குவதற்காகவும் ஐந்தாம் ஆண்டு மாணவர்களுக்கு நடாத்தப்படும் போட்டிப பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் கோட்டக் கல்விப் பணிமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாண பிரதேச கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பு ஒன்றில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது பாடசாலை அதிபர்கள் இவ் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும்படியும், பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கும் படியும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது

### வீரச்சாவு

நேற்று முன்தினம் நடந்த மேதிபடி தாக்குதலின்போது வீரச்சாவடைந்த 2-ம் லெப்டினன்ட் ஆனந்தகுமார் (நந்தன் (சொன்னையா பாலசுந்தரம்-பாண்டிருப்புக் கல்முனை, அம்பாறை) இவருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 04-04-1994

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 1547

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:-

43-3576, 24-5909, 24-6168, 26-2941, 42-5556, 24-1040, 42-6452, 27-9492, 24-6639, 24-4701, 26-1609, 24-6645, 28-4707, 41-9784, 24-4361, 41-9997, 26-4809, 26-5277;

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:-

26-8878, 27-5535, 24-5119, 27-7626, 27-6769, 27-8515, 42-1623, 27-6063, 41-9663, 43-4045.

அளவெட்டி விநாயகர் விளையாட்டுக் கழகம் நடாத்தும்

உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி

1) வரையறுக்கப்படாத போட்டிகள்

2) வரையறுக்கப்பட்ட போட்டிகள்

# உங்கள் மண்ணிற்கு நாம் என்ன துரோகம் செய்தோம்?

## புதுவை இரத்தினதுரை கேள்வி

(யாழ்ப்பாணம்)

நாங்கள் உங்கள் மண்ணிற்கு என்ன துரோகம் செய்தோம்? உங்கள் இராணுவம் இங்கு வந்து எம்மைக் கொடுமைப்படுத்துவதற்கும், எம்மை அழிப்பதற்கும் நாம் என்ன துரோகம் செய்தோம்?

இவ்வாறு நேற்று மாலை, யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம் பெற்ற 'சுபமங்களா' ஆசிரியர் கோமல் சுவாமிநாதனின் விரிவுரைக்கு முன்னர் ஆரம்ப உரையாற்றும்போது, கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரை கேள்வியெழுப்பினார்.

அவர் மேலும் கூறுகையில், எமது போராட்டத்தின் நியாயப்பாட்டை நீங்கள் புரிந்து கொள்ளுங்கள்; பிரபாகரனின் வழியைத்தவிர வேறு வழி உங்களால் கூறமுடியுமா?

உங்களை நாம் நன்கு அறிவோம்; எமது சோகங்களை, இழப்புகளை நீங்கள் உணருங்கள். ஒரிரு செய்திகளைத் தவிர உங்களுக்குத் தருவதற்கு எம்மிடம் எதுவுமே இல்லை.

நாம் இந்த மண்ணில் குனிந்து நிற்க விருப்பப்படவில்லை நிமிர்ந்து நிற்கவே ஆசைப்படுகின்றோம்; இதற்கு உங்களால் ஏதாவது செய்ய முடியுமென்றால் சொல்லுங்கள்.

எமக்கு வேறு மார்க்கம் கிடைக்கவில்லை. வேறு வழி கிடைக்கவில்லை. இந்தப் போராட்டத்தை நாம் இடை நிறுத்துவோமானால், எமது உயிர்ச்செல்வம் ஒத்திவைக்கப்படும்.

இதை நீங்கள் புரிந்தால், உணர்ந்தால் சரி (தி. க)

ஐ.தே.க விற்குள் பிளவு

என்றும், ஐ.தே.கவிற்கு வாக்களித்த தென் மாகாண மக்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன் என்றும் தெரிவித்துள்ளார்-

### பரபரப்பான

பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது; இக் குற்றச் சாட்டுகளை மறுத்த சில உறுப்பினர்கள் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பி. க்கும் இடையில் ஏற்பட்ட தொடர்பே அக் கட்சி தென் மாகாணசபையில் வெற்றியீட்டக் காரணமாக அமைந்தது எனவும் இதனை ஐ.தே.க. பெரிது படுத்திக் கொள்ளத் தேவையில்லை எனவும் தெரிவித்தனர்.

இதனையடுத்து சபையில் மீண்டும் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டது. தாம் இக் கூற்றை நிராகரிப்பதாகவும் இது பலவீன தலைவரினால் ஏற்பட்டதெனவும் பிரேமதாசாவின் கொள்கையை குழிதோண்டிப் புதைக்க முற்பட்டவர்களுக்கு மக்கள் கொடுத்த தண்டனை இது எனவும் பிரேமதாசா ஆதரவாளர் தெரிவித்தனர்.

### மறைமுக

எனவே ஜனாதிபதி அல்லது ஒரு சிரேஷ்ட உறுப்பினர் என்னிடம் நேரடியாக, உடனடியாக தெரிவித்தால் நான் எனது பதவியை தூக்கி எறிய தயாராகஇருக்கிறேன்,

ஈழத்தமிழர் விவகாரத்தில்

# இந்தியா தான் எடுத்த முடிவிற்கு ஒருநாள் பதில்சொல்லவே வேண்டும்

## சுபமங்களா ஆசிரியர் கோமல் சுவாமிநாதன்

(யாழ்ப்பாணம்)

சில சம்பவங்கள் எம்மை தலை குனிய வைக்கின்றன; ஈழத் தமிழர்கள் விடயத்தில் இந்திய அரசு எடுத்த முடிவுகள் சரிதானா? என்ற பல கேள்விகள் எமக்குக் கூட வந்தன. ஒரு சர்வதேச வலைப் பின்னலிலே சிக்கி இந்தியா இதைச் செய்ததா? என்ற கேள்வி கூட எமக்கு ஏற்பட்டது. இந்தக் கேள்விகளுக்கு இந்திய சமூகம் அல்லது இந்திய ஆளும் வர்க்கம் என்றோ ஒரு நாள் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது;

இவ்வாறு சுப மங்களாவின் ஆசிரியரும், நாடகாசிரியருமான கோமல் சுவாமிநாதன் நேற்று யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற 'தமிழ் இலக்கியத்தின் நிகழ்வுகளும் தாக்கங்களும்' என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தும் போது குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது கலை, பண்பாட்டு கழகப் பொறுப்பாளர்புதுவை இரத்தினதுரை அவர்கள் இங்கு ஒரு கேள்வி கேட்டார். நாங்கள் உங்கள் மண்ணிற்கு என்ன துரோகம் செய்தோம்? உங்கள் இராணுவம் இங்கு வந்து எமது மக்களை அழிப்பதற்கும் எமது மக்களுக்கு துன்பங்கள் செய்வதற்கும் நாங்கள் என்ன துரோகம் செய்தோம்? என்று கேட்டார்.

இந்திய அரசை நிறுத்தி வைத்து சரித்திரம் கேட்க வேண்டிய கேள்வி இது; என்றோ ஒரு நாள் இந்தக் கேள்விக்கு இந்திய ஆளும் வர்க்கம் பதில்சொல்ல வேண்டிய கட்டாயம் உள்ளது.

நான் இலங்கை வருவதற்கு தயாரான போது, யாழ்ப்பாணம் செல்லாதீர்கள் என்று பலர் என்னை எச்சரித்தனர். உள்நுழைவு அனுமதி (விஸா) எடுக்க சென்ற போது, பத்திரிகை ஆசிரியர் என்றபார்வையில், இலங்கை அரசின் ஒப்புதல் இல்லாமல் அது தரமாட்டோம் என்றார்கள்;

பிறகு இலக்கியச் சொற்பொழிவு செய்யச்செல்வதாக உறுதிமொழியை வாங்கிக் கொண்டு அரசியல் பேசக் கூடாது என்று கூறி அனுமதி தந்தார்கள்-

நான் அரசியல் பேசமாட்டேன், இலக்கியம்தான் பேசுவேன் என்று அவர்களிடம் சொன்னேன். என் இலக்கியமே அரசியல்தான் என்று அவர்களுக்குத் தெரியாது-

அரசியலை துறந்து விட்ட, அரசியலை மறந்து விட்ட இலக்கியங்கள் கிடையாது-

யாழ்ப்பாண மண்ணில் காலடி எடுத்து வைத்தபோது எனது பயணத்தில் ஏற்பட்ட கஷ்டம் மறைந்து விட்டது-

நான் இங்கு வரும்போது சொன்னேன்- 20ஆம் நூற்றாண்டின் வழிகாட்டியாக ஈழத்து இலக்கியம் திகழும் என்று- போராட்டம் எங்கு நடக்கின்றதோ அங்கு நல்ல இலக்கியம் தோன்றும்-

தமிழிலக்கியம் பின்னடைந்து போனதற்கு இலட்சியமின்மையும், வர்த்தகத் தன்மையுமே காரணங்களாகும் சுதந்திரத்திற்கு பின்னர் ஒரு சமூகத்திற்கு ஓய்வு கிடைக்கின்றது இந்த ஓய்வை விலைக்கு வாங்க சினிமா, நாடகம், பத்திரிகை இந்த மூன்றும் முயற்சிக்கின்றன

இன்று தமிழ் இலக்கியம் வியாபாரப் பொருளாகி விட்ட நிலையை காண்கிறோம்.

ஆபிரிக்காவில், வத்தின் அமெரிக்காவின் யுத்தத்தின் மத்தியில், வெடிகுண்டுகளின் நடுவில் கலைஞர்களால் கவிதைகள் படைக்கப்படுகின்றன; ஈழத்திலும் இதே மாதிரியே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றமையை நான்

## கோமாரியில் அரச அதிபர்

கொழும்புத் துறைமுகத்திலிருந்து இன்று புறப்பட்டு வரும் 'கோமாரி' கப்பலில் யாழ். அரசாங்க அதிபர் யாழ்ப்பாணம் வருகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)


நல்லாகம் விசாலாட்சி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வித்தியாலய மைதானத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் விளையாட்டுப் போட்டி அவ் வித்தியாலய அதிபர் ந. மகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

## மணலாற்றில் வீரச்சாவு



கப்டன் பூவழகு



கப்டன் அரசன்



2ம் லெப். சின்னமணி

கமிட்டி

ரணில் விக்கிரமசிங்கா தலைமை தாங்குவார் என்றும் தென் மாகாண சபை தோல்வியை ஆராய்ந்து அதற்கு நடவடிக்கை உடன் மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நேற்று கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற சூடான வாக்கு வாதத்தை தொடர்ந்து ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா இக் கமிட்டியை அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்ததாக தெரிய வருகின்றது.

## உங்கள் தேவைகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்!

எம்மிடம்

1) வரையறுக்கப்படாத போட்டிகள்

2) வரையறுக்கப்பட்ட போட்டிகள்

உயரம் X நிறை = 620 அடி இறாத்தல்

- யாழ். மாவட்டத்தில் பதிவு செய்த கழகங்கள் அனைத்தும் பங்குபற்றலாம்.
- போட்டிகள் யாவும் விலகல் முறையில் நடைபெறும்.
- போட்டிகள் மகாஜனக் கல்லூரி மைதானம் இணுவில் எனும் இடத்தில் நடைபெறும்

விண்ணப்ப முடிவு திகதி:

**15. 04. 1994**

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:

**பியூட்டி சென்ரர்**
கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

(இ-9010)



இன்று முதல்

யாழ் **ஸ்ரீதர்** திரையில்

தினசரி மாலை 4. 00 மணி, 6. 00 மணி

சனி ஞாயிறு காலை 10. 30, பி. ப 2. 30, மாலை 4.00 - 6.00 மணி

***YOUNG DRAGONS***
***THE KUNG FU KIDS***

(கலர்)

(இ-9011)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81-ம் இலக்கத்திலுள்ள "சமநாதம்" பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.



முந்திக்கொள்ளுங்கள்!

எம்மிடம்

சிறந்த முறையில் அமைக்கப்பட்ட கண்ணாடி அலுமாரிகள் (SHOW CASE) விற்பனை செய்யப்பட உள்ளன.

மற்றும்

புதுவருட நவநாகரிக புடவைத் தெரிவுகளுக்கு இன்றே விரைந்து நாடுங்கள்

| | |
|---|---|
| **கிருஷிகா** | **சுகுணாஸ்** |
| **ஆடை அகம்** | **பிடவை மாளிகை** |
| 69A, நவீன சந்தை, யாழ்ப்பாணம். | 29, நவீன சந்தை, யாழ்ப்பாணம் |

(இ-9012)



ஆதரவற்ற சிறார்களின் வளர்ச்சிக்காக

**ராசி சில்க்ஸ்** மின்னொளியில் நடாத்தும்

இவ்வாண்டின் மாபெரும்

**உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி**

பங்குபற்றும் அணிகள்

| | |
|---|---|
| ※ சென். மேரிஸ் | ※ சென். அன்ரனிஸ் |
| ※ விநாயகர் | ※ டைமன்ட் |
| ※ பாடும்மீன் | ※ ஞானமுருகன் |
| ※ அம்பாள் | ※ பல்கலைக்கழகம் |

இடம்:- பரியோவான் கல்லூரி மைதானம்

காலம்:- 7, 8, 9, 11, 12, 13, 14, 15, 16, 18

நேரம்:- பி. ப. 7 மணி

உதைபந்தாட்டத்தை ரசிப்பதோடு நல்லதோர் பணிக்கு உதவுவோம்

(இ-9018)


றன. ஈழத்திலும் இதே மாதிரியே இலக்கியங்கள் படைக்கப்படுகின்றமையை நான் அவதானித்தேன்.

இங்கு எந்த வசதியுமில்லாமல் கலை - இலக்கியங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன. இங்கு போலியான கலை- இலக்கியங்கள் தோன்றவில்லை வாழ்வு மாயையாகத் தெரியவில்லை. வாழ்க்கையின் யதார்த்தத்தை சந்திக்கின்றோம்.

இங்குள்ள வேதனைகளும் அவல் தழும்புகளும் 21 ஆம் நூற்றாண்டின் மாபெரும் இலக்கியத்தை இந்த ஈழத்தில் உருவாக்கும்.

சுபமான இலக்கியங்கள் இந்த மண்ணில் தோன்றுகின்றன.

இந்த மண்ணின் அரசியலை எமது பத்திரிகையில் எழுதும் போது இந்திய அரசியல் சட்டங்களுக்கு உட்பட்டே ஆகவேண்டும். அப்படியொரு நிலை உள்ளது.

ஈழத்து விஜயத்தின் போது பல விடயங்களை நான் பார்க்கிறேன். இப்படிக்கூட வாழ்கிறார்களா? தமது இருப்பை நிலை நிறுத்த இப்படியும் போராடுகிறார்களா என நினைக்கிறேன் என்றார்.

(தி. க)

## புலிகள் தாக்கு

கொழும்பில் செய்தியாளர் களிடையே பேசிய அவர் மேலும் இருவர் காயமடைந்ததாகவும் தெரிவித்தார்.

## ஐ. தே கவிற்குள்

கவிற்குஎதிரான அணியினர் தேர்தல்களை எதிர்நோக்கியுள்ள இக்காலப் பகுதியில் இவ்வாறான ஒருபெரும் தாக்குதல்மூலம் சிறுபான்மை மக்களின் எதிர்ப்பைச் சந்திக்க வேண்டி ஏற்படும் என்பதனாலேயே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருவதாகவும் கூறப்படுகின்றது.

துகள் இக் கமிட்டியை அமைப்பதற்கு இணக்கம் தெரிவித்ததாக தெரிய வருகின்றது.

## பரீட்சை முடிவு

குறிப்பில்-

அண்மையில் வெளிவந்த யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பரீட்சை முடிவுகள் மாணவர் பலரை விரக்தி நிலைக்கு உள்ளாக்கியுள்ளது. இது தொடர்பாகக் கலந்தாலோசித்த விஞ்ஞானபீட மாணவர்கள், தொடர்ந்தும் பரீட்சை முடிவுகள் மோசமாக அமைவதைத் தவிர்க்கும் பொருட்டு எட்டு அம்சக் கோரிக்கையைப் பீடாதிபதியிடம் சமர்ப்பித்திருந்தும், கோரிக்கை சம்பந்தமாக திருப்திகரமான பதில் கிடைக்கப்பெறவில்லை என்றும்-

அதனால் விஞ்ஞான பீட மாணவர்கள் செவ்வாய்க்கிழமை முதல் (இன்று) விரிவுரைகள், பரீட்சைகள் யாவற்றையும் முற்றாகப் பகிஷ்கரிப்பதெனத் தீர்மானித்துள்ளனர். பீடாதிபதியிடமிருந்து திருப்திகரமான பதில் கிடைக்கும் வரை பகிஷ்கரிப்பு தொடரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும், ஏற்கனவே ஆராயாது வெளிவந்த சில பத்திரிகைச் செய்திகள் தமக்கு மன வேதனையைத் தருவதாகவும் அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீட உள்புறச் சுவர்களில் "ஒரு மாணவன்பாஸ்பண்ண" ஒருடிப்பார்ட்மென்றா?" மற்றும் மற்ஸ்டிப்பார்ட்மென்ற் என்ன சூரிய கற்றைப் புதைகுழியா? என்ற சுலோகங்களும் விரிவுரையாளர்களுக்கும் மற்ஸ் டிப்பார்ட்மென்றுக்கும் எதிராகப் பல சுலோகங்களும் எழுதப்பட்டிருந்ததமை குறிப்பிடத்தக்கது.